


# ரமணோதயம்

ஜனவரி 2021

காலாண்டு

ஜயந்தி இதழ்

விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 20 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2021

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

*ஜயந்தி இதழ், ஜனவரி 2021*


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| *1* | *ஆசிரியர் உரை* | | *3* |
| *2* | *ஔவைக் குறள்* | *ராம் மோஹன்* | *17* |
| *3* | *இனிவரும் திருநாட்கள்* | | *22* |
| *4* | *சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்-தொடர்* | *வி. நிரஞ்சன்* | *23* |
| *5* | *கிரிவலம் எனும் ஞான யாத்திரை* | *ஸ்ரீ ரமணதாசன்* | *29* |
| *6* | *ஆதிரை நாயகன் சிதம்பரேசன்* | | *44* |
| *7* | *முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள்* | *ரமண சுந்தர்ராஜன்* | *45* |
| *8* | *திரு. ரமணானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்* | *டாக்டர் A. கொண்டல்ராஜ்* | *57* |
| *9* | *ரமணாயனம்* | *க்ரேஸி மோஹன்* | *61* |
| *10* | *நூல் அறிமுகம்* | | *70* |
| *11* | *செய்திக் கட்டுரை* | | *75* |

# ஆசிரியர் உரை

## அருவியாய்ப் பாயும் அண்ணல் அருளும், அன்பும்

*நாம் செய்த நற்பேற்றால் பகவானின் 141 ஆவது ஜயந்தியைக் கொண்டாடி மகிழ்ந்தோம்.*

*நம் போன்ற சாமானியர்களின் பிறப்பு நம்மால் நிர்ணயிக்கப் படுவதில்லை. நாம் பிறக்கும் நாளோ, நமது தாய்தந்தையரோ, நமது சூழ்நிலையோ நம்மால் முடிவு செய்யப்படுவதில்லை. மாறாக, பகவான் போன்ற மஹாவியக்திகள் தமது பிறந்த நாளையும், பெற்றோரையும், சூழ்நிலைகளையும் தாமே முடிவுசெய்து தோன்றுகின்றனர். அந்நிகழ்ச்சியை 'அவதாரம்' என்கிறோம். 'வானின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு' என ராமபிரானின் பிறப்பினை கம்பன் குறிப்பிடுகின்றான். எல்லையற்ற பரம்பொருள், நம்மீது கொண்ட கருணையின் காரணமாக, நம்மை வழிநடத்துவதற்காக, நம்மை உய்விப்பதற்காக, தன்னை ஒரு எல்லைக்கு உட்படுத்திக்கொண்டு, பௌதிக உருவில் தோன்றுவதே அவதாரம்.*

*பகவானின் பிறந்த தினத்தை ஏன் 'ஜயந்தி' என்று குறிப்பிடுகிறோம்? பார்க்கப் போனால் 'ஜயந்தி' என்பது சம்ஸ்கிருத பன்மையைக் குறிக்கும் சொல். பகவான் என்ற வியக்தியைக் குறிப்பிடும்போது 'ஜயதி' என்ற ஒருமைச் சொல்லை அல்லவா பயன்படுத்த வேண்டும்? பன்மைச் சொல் ஏன்?*

*உண்மையில் ரமண ஜயந்தி என்பது பகவானின் தனிப்பட்ட பிறந்த தினத்தைக் குறிப்பிடுவதில்லை. பகவானுக்கு ஏது பிறந்தநாள்? அவர் பிறக்கவுமில்லை, இறக்கவும் இல்லை. அவர் நிரந்தரமாக என்றும் நம் இதயத்துள் குடிகொண்டுள்ளார். எனவே, நாம் 'ரமண ஜயந்தி' என்று பன்மையில் குறிப்பிடுவது, உண்மையில் நம் போன்ற சாதகர்கள் பகவானில் மீண்டும் ஆன்மிகப் பிறவி எடுத்தலைச் சுட்டுகிறது. பகவானிடம் நாம் பூர்ணமாக சரணடையும்போது நாம் பகவானில் மீண்டும் பிறவி எடுக்கிறோம். அதுவே ரமண ஜயந்தி.*

*இயற்கை முழுதும் பரந்து காணப்படுவது கவர்ச்சி எனப்படும் சக்தி. புற இயற்கையிலும் அக இயற்கையிலும் கவர்ச்சி எனும் சக்தி எங்கும் காணப்படுவதற்குக் காரணம் என்ன? எங்கும் விரவி உள்ள மெய்ப்பொருள். இதுவே அடிப்படைத் தத்துவம். அது அண்டம் முழுதும் நீக்கமற நிறைந்திருப்பதால் உலகவாழ்க்கை அனைத்தும் கவர்ச்சி மயமாகின்றது. நாயகனுக்குத் தன் நாயகி மீது எழும் கவர்ச்சிக்கும் பிரியத்துக்கும் காரணம் நாயகியல்ல. அதற்குக் காரணம் உள்ளுறை ஆத்மாவே என்கிறார் ரிஷி யாக்ஞவல்கியர். இந்த உலகம் அளாவிய கவர்ச்சி 'ஹரி' என்றும் 'ஹரன்' என்றும் பெயரிடப்படுகிறது. 'ஹரி' மற்றும் 'ஹரன்' என்ற பெயர்கள் 'ஆகர்ஷிப்பவன்' அல்லது 'அபகரிப்பவன்' என்றே பொருள் கொண்டனர். யச்ச கிஞ்சித் ஜகத் தத் சர்வம் வ்யாப்யா நாராயண ஸ்தித: (இவ்வண்டம் முழுவதும் எது காணப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ அதில் எல்லாம் உள்ளும் புறமும் இறைவன் வியாபித்துள்ளான் என்று நாராயண உபநிடதம் கூறுகிறது. எப்பொருட்டும் எவ்வுயிர்க்கும் உள்ளத்தும் புறத்தும் அறிவுஇன்ப வடிவாகி நடிக்கும் மெய்ப்பொருளாம் சிவம் என்கிறார் சிவனடியார். 'அன்பே சிவம்' என்பதே சமயத்தின் உயிர்நாடி. அன்பு, கவர்ச்சி மயமானது. எனவே இயற்கையில் காணப்படும்*



கவர்ச்சிக்கு மூலகாரணம் உள்ளூறையும் பரம்பொருளே. பரம்பொருள் கொண்டுள்ள கவர்ச்சி தரும் ஆனந்தத்தால் உந்தப்பட்ட அழியாத ஆனந்தம் வேண்டும் என மனிதன் முயல்கிறான். இந்த ஆவல் நிறைவேற்றும் ஆற்றல் உன்னுள்ளேயே உள்ளது என்று சத்குரு உறுதி கூறுகிறார்.

நம் மனத்தைக் கவர்வது, வெளியில் உள்ள பொருட்கள் அல்ல. அது எங்கும் பரவியுள்ள சச்சித்தானந்தப் பொருளே. என்றும் நாம் இவ்வுண்மையை உணர்வதில்லை. ஏனெனில், இதைக் காண விடாது மறைப்பது அவித்தை அல்லது அஞ்ஞானம்.

சாதகன் செய்யும் முயற்சியால் ஸத்வகுணம் ஓங்கி குருவருள் சிந்திக்கும்போது நம்முள்ளே நம்மைக் கவர்ந்த ஆத்ம ஜ்வாலை பொங்கி உயர்கிறது.

பார்க்கப்போனால், தெய்வபக்தியே முற்றிக் கனியும்போது குருபக்தி ஆகிறது. கங்கையில் வீழ்ந்த மழைத்துளிபோல் பக்தன் பரத்தில் ஒன்றுகிறான்.

இச்சை முயற்சி ஏதுமின்றி தானே தானாய் வீற்றிருக்கும் சத்குருவின் சந்நிதியில் சிலசமயம் நாடி வந்தவரின் உலகியல் தொடர்பான ஆசைகள்கூட நிறைவேறும் வாய்ப்புள்ளது. மணிவாசகர் கூறுகிறார்.

வேண்டத்தக்கது அறிவோய்நீ வேண்ட
முழுதும் தருவோய்நீ

என்பதே ஸத்குருவின் லக்ஷணம் ஆயினும், உண்மையான சாதகன் குருவின் அருள் அன்றி வேறு எதையும் வேண்ட மாட்டான். கனிகள் நிறைந்த தோட்டத்திற்குச் சென்றாலும் காக்கை விரும்புவது வேப்பம்பழமே என்று அடியவர் கூறியது தெய்வ சந்நிதியிலும் பொருள், புகழ் வேண்டி நிற்பாரைக் குறிப்பது. அதுபோல் அல்லாமல், பகவான் சந்நிதியில் அருள் அன்றி வேறு எதையும் நாடுவது மடமை அல்லவா?

பகவானிடம் சரண் அடைந்தபின் அவரது அருள் மொழிகளைக் கேட்டு மனப்பக்குவம் அடையும்போது, மனன நிதித்யாஸனம் போன்றவற்றையும் தொடர்ந்து செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கு முருகனார் அழகாகப் பதிலளிக்கிறார். ஸத்குருவின் போதனையைக் கேட்டு மனம் என்பது முற்றிலும் தன்னில் ஒடுங்கியபின் வேறு எந்த கிரியையும் தேவையில்லை. குருவின்மீது கொண்ட தியானமே, அவருக்குச் செய்யும் பூஜை என்கிறார் முருகனார்.

கோன்என்னும் ஞான குருபோதக் கட்டழலால்
யான்என்னும் சீடஉணர்வு ஈடழிய - மோன
நிருவாதனை ஓங்கு நிட்டையே ஞான
குரு பூசனையாக் குறி.

— குருவாசகக் கோவை, 311

பொருள்: குருவும் கடவுளும் வேறு அல்ல. சத்குருவே தெய்வம். குருநாதனின் ஞானாக்கினியால் இதுகாறும் 'நான்' எனும் அகங்காரமாய்க் கிளர்ந்து கொண்டு இருந்த தன்முனைப்பு எரிக்கப்பட்டபோது,

வாசனைகளும் அகங்காரமும் அழிக்கப்பட்டு ஜீவன் ஆத்மாவில் ஒடுங்குகிறது. அதுவே ஞானகுருவுக்குச் சீடன் செய்கின்ற பூஜையாகும்.

அடுத்த பாடலில் முருகனார் இதை மேலும் சிறப்பாக விளக்குகிறார்.

ஏன்றநான் ஆர்எனஉள் ஏய்ந்தஉசாவால் எழுந்த
பூன்ற அநுபோககுரு போதநிலை - ஊன்றலால்
பொய்ச்சீட போதமறப் பொன்றலே தேசிகர்க்குச்
சச்சீடர் செய் பூசனை. — (பாடல் 312)

பொருள்: ஒரு சிறந்த சீடன் குருவுக்குச் செய்யும் உண்மையான பூஜை, 'நான் சீடன்; அவர் எனக்கு பூரண குரு' என்ற பொய் உணர்வை முற்றிலும் அழித்தலாம். நான் சிஷ்யனாக அங்கீகரிக்கப்பட்டேன் என்று என்னும் அந்த நான் யார் என்ற விசாரணையை இதயத்தை நோக்கிச் செலுத்தி விசாரிக்கும்போது சீடர் என்ற உணர்வு, குரு என்ற ஸத்யத்தில் முற்றிலும் ஒடுங்கிக் கரைகிறது. அதுவே உண்மையான குரு பூஜை.

இதுவே உண்மையான குரு பூஜை என்று விளக்கிய முருகனார் எது குருவுக்குச் செய்யும் அபசாரம் என்றும் விளக்குகிறார்.

உடல்ஆதி தேசிகனுக்கு ஒப்படைத்த பின்புஅவ்
உடல்ஆதி யான்எனதுஎன்று உட்கொண்டு - இடல் ஆய
தத்தாப காரம் சழக்குத் தவிர்தலே
சுத்தகுரு பூசை துணி.

— குருவாசகக் கோவை, 317

பொருள்: உண்மையாகக் குருவிடம் முற்றிலும் சரணடைந்த ஒரு சாதகன், பின் மீண்டும் 'நான்' 'எனது' என்று தனது மனதையோ, உடலையோ, உடைமைகளையோ கருதக்கூடாது. அவை முற்றிலுமாகக் குருவிடம் ஒப்படைக்கப் பட்டவை. அங்ஙனம் கருதுவது, குருவுக்குத் தந்ததை மீண்டும் திருடி எடுத்துக் கொள்வதாகிய பெரிய அபசாரம்.

*ஆதலின் இதனைத் தவிர்த்தலே உண்மையான குருபூஜை.*

*இங்ஙனம் ஸத்குரு ரமணனிடம் பூர்ண சரணாகதி செய்யும்போது, சாதகனின் அகந்தை எழுச்சி முற்றிலும் முடிவுற்று ஜீவனான நதி தன் மூலமாகிய ஆத்ம சாகரத்தை அடைந்து, அசைவற்று, அலைவற்று அமைகிறது. இந்த ஆத்ம நிஷ்டையே அன்பின் சிகரம், கவர்ச்சியின் கொடுமுடி, இதுவே பக்தியின் சிகரமான பரபக்தி.*

*இந்த நிலையையே பகவான்*

***அம்புவில் ஆலிபோல் அன்புருவில் எனை***
***அன்பாக் கரைத்தருள் அருணாசலா***

***— (மணமாலை, 101)***

*என்கிறார்.*

*பனிக்கட்டியும், நீரும் ஒரே பொருளால் ஆனவையே. பௌதிக உருவம் மட்டுமே வேறுபடுகிறது. பரபக்தியும், அருளும் சேர்ந்த பரபக்திக் கதிர் வீச்சில் பனிக்கட்டி உருகி 'பகவான் மீது கொண்ட அன்பு' என்ற நிலையில் கரைந்து வேறுபாடற்ற ஒன்றாகிறது. ஜீவன் அல்லது மனம், பரபக்தியில் ஆன்மாவில் ஆன்மாவாகக் கரைந்து, தனது தனி இருப்பை இழந்து விட்டதால், அது மீண்டும் எழுந்து, தனக்கு அன்னியமாக எதையும் செய்யவோ, விரும்புவதோ இயலாது. இந்நிலையில் ஒருவன் தனக்கு அன்னியமாக எதையும் பார்ப்பதில்லை.*

*இந்த அன்னியமில் அன்பே அருணாசல பஞ்சரத்னத்தின் இறுதிப் பாடலாகப் பகவானால் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால், எப்பொழுதும்***
***உன்னைக்கண்டு எல்லாமும் உன்னுருவாய் - அன்னியமில்***
***அன்புசெய்யும் அன்னோன் அருணாசல வெல்கும்***
***இன்புருவாம் உன்னில் ஆழ்ந்தே.***

இந்த வெண்பாவில் அருணாசலமே ஆகிய சத்குருவிடம் ஒன்றாகக் கரைவதற்கான ஐந்து நிலைகளைக் குறிப்பிடுகிறார்.

1. உன்னைச் சரணாக அடைந்து உன்னிடத்தில் உடல், பொருள், ஜீவன் அனைத்தையும் அர்ப்பணமாக ஒப்படைத்தல்
2. உள்ளத் தூய்மை
3. நம் கண்ணுக்குப் புலப்படும் அனைத்தையும் உன் ஸ்வரூபமாகவே அறிந்து உணர்தல்
4. அனைத்தையுமே தனக்கு அன்னியமாகக் கருதாமல் 'ஸர்வம் ச மயிபஸ்யதி' என்ற கண்ணன் வாக்குப்படி அனைத்தையும் தானாகவே கருதி அன்பு செய்தல்
5. பேரின்ப வடிவமாகிய உன் ஸ்வரூபத்தில் ஆழ்ந்து கரைந்து ஒன்றாகவே ஆதல்

என்று பகவான் அருணாசலனைப் போற்றும் முகமாக அனன்ய சரணாகதியை விளக்குகிறார்.

இரண்டாம் அடியில் வரும் 'எல்லாமும் உன்னுருவாய்' என்று குறிப்பிடும் தொடர், மனத்தை மட்டுமல்லாது, அனைத்து உலகத்தினையும் தாவர, ஜங்கமங்கள் அனைத்தையும் இறைவன் உருவமாகவே கருதி வழிபடலைக் குறிக்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாகவே பகவான் வாழ்ந்தார். குரங்கு, மான், நாய்கள், ஏன், விஷப் பாம்புகள் முதல் முட்டையில் உள்ள கரு உட்பட அனைத்தையும் தன் ஆத்மவெளிப்பாடாகவே கருதி அன்னியமற்ற அன்பு செலுத்தி வாழ்ந்த உயர் எடுத்துக்காட்டல்லவா பகவானின் வாழ்க்கை!

மனத் தூய்மையினாலேயே ஆன்மிகப் பாதை நமக்குப் புலப்படும். மனத் தூய்மையும், உள்ளப்

*பயிற்சியும், நித்யாநித்ய விவேகம் எனப்படும் கூர்ந்த அறிவும் அடிப்படைத் தேவைகள். எனினும், மெய்யன்பின் சிகரமாகிய ஆன்மிகப் பரிணாமம் ஆத்ம விசாரத்தினாலேயே முற்றும் அறியப்படுகிறது. ஆன்ம விசாரத்தைத் திறம்படப் பயிலவேண்டும் எனில், அது சத்குருவாம் ரமணன் திருவருளாள் மட்டுமே நம்மால் செய்ய முடியும். வெறும் நூலறிவினால் மட்டுமே இந்த ஞானத்தை அறியமுடியாது. திருஞானசம்பந்தர் இதைத் தெளிவாகக் கூறுகிறார்.*

*ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்கு*
*சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் ஜோதி.*

*அறிவுக்கூர்மையாலும், வாதத் திறமையாலும் இறைவனை அறிய முடியாது. இறைவனை அறியும் ஆர்வத்தோடு, குருநாதரிடம் முற்றிலும் சரண் அடைந்தால் மட்டுமே மிக்க சூட்சுமம் ஆன இறைவனை அடையும் நெறியை அறிய முடியும். அப்போது சத்குருவின் பேரருளால் பரமாத்மாவை அறிய முடியும் என்று குருவாசகக் கோவை 648ஆவது பாடல் விளக்குகிறது.*

*பகவான் வாக்கு அருளின் திறத்தை தெளிவாக விளக்குகிறது.*

***உயிர்க்குஉயிரா நிற்கும்தன் உண்மையாம் ஈசன்***
***பயக்கும் திருவருளின் பாங்கே - நயக்கும் மெய்ஞ்***
***ஞான விசார நடைகடைபோய் உள்ளநிலை***
***ஆன சமாதி அடைவு.***

*— குருவாசகக் கேவை, 724*

*பொருள்: உயிர்க்கு உயிராய் நின்று, அனைத்தினும் ஊடுருவித் திகழும் சத்குருவின் பேரருளினால் மட்டுமே, 'நான்' என்னும் உணர்வு இதயத்தில் ஒன்றும்; சமாதி நிலையாம் ஆத்ம சாதனையின் குறிக்கோளான பரத்தில் கரைதல் சித்திக்கும்.*

*சத்குருமீது வைத்த திடநம்பிக்கையும், இடையறாத பயிற்சியும் அருள் அருவியைக் கொண்டு தரும். குரு*

*ஸத்குரு ரமணன் மீது கொண்ட பக்தியால் அருளும் அருளால் விசாரமும், விசாரத்தால் அனன்ய பரபக்தியும் கிடைக்கப்பெறும். அதுவே ஆத்ம சாட்சாத்காரத்தில் முடிவுறுகின்றது. அது வெறும் படிப்பினால் வராது.*

*திருவருள்தான்*
*வித்தையிலும் வாராது வேறுஎதிலும் வாராது*
*பக்தியினால் தானே வரும்.*

— குருவாசகக் கோவை, *726*

*எனக்கு ஸத்குருவின் அருள் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை எங்ஙனம் அறிவது?*

*சாதகன் ஒருவன் ஆன்ம விசாரத்தில் தீவிரமான முயற்சியுடையவனாக இருப்பானாயின், அவனுடைய இடையறா முயற்சியே அவனுக்கு அருள் கிடைத்து வருகிறது என்பதற்கு அத்தாட்சி.*

*பகவான் தன் முதல் படைப்பான 'நானார்' நூலில் தெளிவாகக் கூறுகிறார்.*

*ஆன்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்றும் இடம்கொடாமல், ஆன்ம நிஷ்டாபரனாய் இருப்பதே தன்னை ஈசனுக்கு அளிப்பதாம் என்று அறுதி இடுகிறார் பகவான். நாம் நம்மை பகவானுக்கு முழுமையாக ஒப்புவிப்பது என்பது நம் இதயம் முழுவதும் பகவானைப் பற்றிய தியானத்திலேயே ஆழ்ந்து இருப்பதாம்.*

*சத்குருவை இவரே எனது 'சத்குரு' என வரித்துக் கொண்டபின் முக்தியோ, பந்தமோ, எதை அவர் எனக்களிக்க விரும்பினாலும், அவர் எனக்கு எந்த நிலை தந்தாலும் அதுவே எனக்கு ஆனந்தமான ஒன்றாகும் என்பதே சத்குருவிடம் கொண்ட பரபக்தியின் அடையாளம்.*

*இத்தகைய பூர்ண சரணாகதியின் லட்சணத்தைப் பற்றி பகவானே கூறுகிறார்:*

*என்புகல் இடநின் இட்டம் என் இட்டம்*
*இன்பம் எற்கு என்னுயிர் இறையே.*

*— அருணாசல பதிகம், 2*

*அண்ணா மலையாய்! அடியேனை*
*ஆண்ட அன்றே ஆவியுடல்*
*கொண்டாய்! எனக்குஓர் குறைஉண்டோ!*
*குறையும் குணமும் நீயல்லால்*
*எண்ணேன் இவற்றை என்னுயிரே!*
*எண்ணம் எதுவோ அதுசெய்வாய்!*

*— அருணாசல நவமணிமாலை, 7*

இதே கருத்தை மணிவாசகரும் கூறுகிறார்:

*வேண்டத் தக்கது அறிவோய் நீ!*
*வேண்ட முழுதும் தருவோய் நீ!*
*வேண்டி என்னைப் பணிகொண்டாய்*

மற்றும்

*அன்றே என்தன் ஆவியும்*
*உடலும் உடைமை எல்லாமும்*
*குன்றே அனையாய்! என்னைஆட்*
*கொண்ட போதே கொண்டிலையோ!*
*இன்றோர் இடையூறு எனக்குஉண்டோ!*
*எண்தோள் முக்கண் எம்மானே!*
*நன்றே செய்வாய்! பிழைசெய்வாய்!*
*நானோ இதற்கு நாயகமே!*

என்று பூரண சரணாகதி அடைந்தவனின் மனப்பாங்கை மணிவாசகர் எடுத்துக் காட்டுகிறார்.

பிரம்மத்தின் இரு பக்கங்கள் சித் (consciousness) மற்றும் ஆனந்தம் (Bliss). இவையே ஞானம், பரபக்தி எனப்படுகின்றன. இவை இரண்டுமே பிரம்மம்தான்.

நாம் ஆரம்பத்தில் கண்டபடி இந்த அண்டம் முழுதும் அன்பினால் உண்டாகும் இறைக் கவர்ச்சி உணர்வில் நிலைபெற்று செயல்படுகின்றன. ஆன்மாவில் நிலை பெறுதலே ஞானம். எதை நாம் பூர்ணமாக நேசித்து

*அன்பு செலுத்துகிறோமோ, அதிலேயே நிலைத்து நிற்கிறோம். எனவே சாது ஓம் சுவாமிகளின் கூற்றுப்படி ஆத்மாவில் ஒருவன் அடையும் ஸ்திர நிலையே அன்பின் பரிபூர்ண நிலை. இத்தகைய பரபக்தி உடைய ஒருவன் பரமாத்மா ஆகவே அமைவான்.*

*பகவானும் இதையே எழிலுறக் கூறுகிறார்:*

***அறிவுநெறி அன்புநெறி ஆன இரண்டும்***
***உறவு நெறியாக உணர்க - பிறிவுஇலா***
***அவ்இரண்டுள் ஒன்றினில்நின்று ஒன்றை அகற்றாமல்***
***ஒவ்வஒருங்கு உள்ளத்து ஒழுகு.***

*— குருவாசகக் கோவை, 731*

*பொருள்: ஞானம், பக்தி என்ற இருபாதைகளும் பிரிக்க இயலாமல் ஒருங்கு இணைந்தவை என்பதை அறிக. இரண்டும் வெவ்வேறானவை என்று பிரிப்பது அக்ஞான மயக்கத்தால் உண்டாவதே. இரண்டையுமே இதயத்தில் ஒருங்கிணைத்து இணக்கமாகத் தியானிப்பாயாக.*

*இறை நம்மை இழுக்கும் கவர்ச்சியே பக்தி. நாம் இருந்தபடி இருப்பதே ஞானம். இந்த இழுப்பும் (கவர்ச்சியும்) இருப்பும் (ஸத்) ஒன்றில்லாமல் ஒன்று இல்லை என சாதனை சாரம் 116ஆவது பாடல் பகர்கிறது.*

*சங்கர பகவத்பாதர் இயற்றிய பிரகரண கிரந்தமாகிய 'ஆன்மபோதம்' நூலின் தமிழாக்கத்திலும் பகவான் இருப்புணர்வும், பேரன்பின் முகிழ்க்கும் ஆனந்தமும் பிரிக்க முடியாதவை என்று குறிப்பிடுகிறார்.*

***அருக்கன் தனக்குஒளி அப்புக்குத் தட்பம்***
***எரிக்குத் தணமும் இயல்பாய் இருக்கை - எனச்***
***சத்துசித்து ஆனந்தம் சார்நித்தம் சுத்தம்இயல்பு***
***ஒத்தது ஆன்மாவுக்கு என்றுஓர்.***

*— ஆன்மபோதம், 24*

*பொருள்: தண்ணீருக்குக் குளிர்ச்சியும், நெருப்புக்குச் சூடும் எப்படி இயல்பாக உள்ளதோ அப்படியே இருப்புணர்வும், ஆசையற்ற அன்பில் எழும் பேரானந்தமும் பிரிக்க இயலாத இயல்பான சுபாவம் ஆகும்.*

*தெய்வீக உணர்வால் கவரப்பட்டு, அதையே நாடும் சாதகனுக்கு தெய்வத்தின் உதவி, அதன் அருள் வடிவில் வருகின்றது. குருவருள், அதனை நாம் நாடிய கணப்பொழுதில் ஊற்றெடுக்கும் உணர்வாற்றல் ஆகும். நசிகேதஸிடம் கட உபநிஷதத்தில் தென்திசைத் தேவன் கூறியவாறு, அந்த அருள் யாரைத் தேர்ந்து எடுக்கிறதோ, பரம்பொருள் அவனிடம் ஸத்குருவின் வடிவில் வருகிறது. அருளும், முயற்சியும் அந்த வரவின் இருமுனைகள் ஆகும். மனிதன் என்னும் முனையில், அருள் மழையை ஏற்க மனமாகிய நிலத்தைப் பண்படுத்த வேண்டி உள்ளது. பண்படுத்தப்படாத பூமியில் மழைநீர் வழிந்தோடும். சாதகனின் முயற்சி என்பது அருள் மழையின் பயனைப் பெற்று தன்னைப் பக்குவம் அடையச் செய்து கொள்வதாகும். அந்த முயற்சியின் இறுதி வெற்றி அருளும் ஆசானின் கரங்களில் உள்ளது. உண்மையில், இந்த முயற்சியேகூட, குறிப்பிட்ட சூழ்நிலையில் வரும் அருளின் தாக்கத்தினால்தான் சாத்தியமாகின்றது. அருள், முயற்சி இரண்டுமே தேவை. நாம் முயற்சி எனும் வித்தினை இட்டு, அருள்மழையை வேண்டிப் பொறுமையுடன் காத்திருக்கும்போது, ஆன்ம விடுதலை என்பது பரம்பொருளின் இச்சைப்படியே நிகழ்கிறது. மனம் பண்பட்ட பின் சாதகன் செய்யவேண்டியதெல்லாம், மனமாயையை அறவே நீக்கி 'சும்மா' காத்திருப்பதுதான்.*

*இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று*
*என்று வருமோ அறியேன் என் கோவே துன்று மல*
*வெம் மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து*
*சும்மா இருக்கும் சுகம்.*

*— திருஅருட்பா*

*இந்த மனவெளி கடந்து பரத்தின் அணைப்புக்காகக் காத்திருக்கும் உயிர் நிலையை பகவான் எழிலுடன் வரைகிறார்.*

***சுகக்கடல் பொங்க, சொல்லுணர்வு அடங்க***
***சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா***

***— அக்ஷரமணமாலை, 31***

*பரம்பொருளைத் தேடும் முயற்சியில் குறுக்கே நிற்பது மனதுதான். ஆன்மிக சாதனை என்பது வெளியுலகச் சுழற்சியில் இருந்து மனத்தை விலக்கி, அதை அமைதியாகவும் சலனமற்றும் இருக்கவைக்க கற்பது, அப்போது, அடியாழத்தின் உள்ளிருந்து அமைதிக் கதிர்கள் பிரதிபலிக்கின்றன. எந்த எண்ணம் எழினும் அதை மனதின் மேல்தளத்தில் மட்டும் சஞ்சரித்துப்போக அனுமதிக்கும் யுக்தியை வளர்த்து, ஆழ்மனதின் உள்நோக்கிய பயணத்திற்கு 'நான் யார்' என்னும் கடிவாளமிட்டுப் பயணிக்க வேண்டும். மேலெழும் எண்ணங்களால் பாதிக்கப்படாமல், அவற்றை சாட்சி பாவத்தில் நோக்கும்போது சிந்தனைகளின் ஆக்கிரமிக்கும் தன்மை சிறிது சிறிதாகக் குறைந்து, குறைந்து, கடலுள் மூழ்கும் கடைசி அலைபோல் மறைந்துவிடும். இதற்கு முக்கியமான காரணி குருவின் அருள்.*

*வழிபாடு என்பது வார்த்தைகள் அல்ல. இதயத்துடன் கலப்பதுதான் வழிபாடு. இம்முயற்சியில் நாம் தன்னந் தனியானவர்கள் அல்ல என்கிறார் பகவான். நமக்குக் கைகொடுக்க குரு அருள் எப்போதுமே ஆயத்தமாக உள்ளது.*

*பகவானின் முத்தாய்ப்பான முத்திரை இதுவே. அருள்தான் தொடக்கம். அருள்தான் நடுவும் முடிவும். அருள்தான் 'நான்' ஆகிய ஆன்மா. ஆன்மாவை உடலுடன் தவறாக அடையாளப்படுத்திக் கொள்வதால் குரு தன் உடலோடு இருப்பதாகக் கருதப்படுகிறார்.*

ஆனால், குருவின் கண்ணோட்டத்தில் குரு என்பது ஆன்மாதான். ஆன்மாதான் குரு. வேறு எங்கிருந்து அருள் சுரக்கமுடியும்? ஆன்மாவில் இருந்து மட்டும்தான். ஆன்மாவின் வெளிப்பாடு அருளின் வெளிப்பாடே. எல்லாச் சந்தேகங்களும் தவறான கண்ணோட்டத்தாலும் விஷயங்களை ஒருவருக்குப் புறம்பானது என்று பார்ப்பதாலும் உதயமாகின்றன. ஆன்மாவுக்கு எதுவுமே அன்னியமானது அல்ல.

ஆரம்ப நிலையில் சாதகன் யாரிடம் சரணடைய வேண்டும்? ஆன்மாவிடம் என்றால் அது மிக நுட்பமானதான ஒன்று. அருள்கூர்ந்து மனிதனின் தேடலுக்கு விடை அளிக்கக்கூடிய புலனுக்குக் காட்சி தரும் மனித வடிவில் வரும் தெய்வ சக்தியான ஸத்குருவிடம்தான் சரண் புகவேண்டும். தனது அருட்பார்வையின் அளவற்ற சக்தியால் நமது உயர்ந்த ஆத்மிகப் பயணத்தைத் தொடங்கி வைக்கும் ஸத்குரு ரமணரிடம் சரண் அடைக! அவர்தம் பேரருளே எல்லாத் தடைகளையும் தகர்த்து நம்மை ஆன்மாவில் ஒன்றிடச் செய்யும் என்பது திண்ணம்.

இத்திட நம்பிக்கையுடன் ஆன்மிகப் பாதையில் முன்னேற இந்த ஜயந்தி நாளில் உறுதி பூணுவோமாக!

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### திருவருட்பால் – அருள்பெறுதல்

*101. அருளினால் அன்றி அகத்துஅறிவு இல்லை*
*அருளின் மலம் அறுக்கலாம்*

பொருள்: இறையருள்/குருவருள் அன்றி 'நான் ப்ரம்மம்' என்ற ஞானம் வராது. ஞான எழுச்சியைத் தடுக்கும். ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களை நாம் அருளின் பேற்றால் அழிக்கலாம்.

விளக்கம்: 'அருள்' என்பது நாம் கேட்டுப் பெறுவதல்ல. நம் உண்மை இருப்பின் இயல்பான அம்சங்களான சத்சித் ஆனந்தம் ஆகிய ஒரே பொருள். இவ்வானந்தமே கடவுள் நம்மீது கொண்டுள்ள எதிர்பார்ப்பற்ற வீரியமாக விளங்கும் அருள். ஆண்டவனின் திருவருள் பாரபட்சமின்றி எல்லா ஜீவர்களின் உள்ளத்திலும் எல்லா இடங்களிலும் எல்லாக் காலத்தும் எல்லா நிலைகளிலும் விளங்கிக் கொண்டு இருப்பது. நாம் நம் உண்மை சொரூபத்தை அறியவேண்டுமெனில், நம் அறிவைக் கொண்டு ஆராய்ந்து அதை அறிய முடியாது.

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள் ஜோதி

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

*'அருளன்றி இவ்வுலகம் இல்லை' என்பது வள்ளுவர் வாக்கு. அருளன்றி பெற்றறிவால் ஏதும் பயனில்லை. எனது ஸத்குருவாம் இறைவன், அருளின் துணைகொண்டு என்னைக் காண்பாயாக என்றான். அதைப் பின்பற்றாமல் ஆணவம்கொண்டு அறிவைக் கொண்டு அவனை அறியலாம் என்று எண்ணினேன். இறுதியாய் நான் கண்டது எல்லாம் ஆணவ இருள்தான். எந்த 'நானை' அறிய முயற்சித்தேனோ அந்த 'நான்' என்னும் ஆத்மாவும் தோன்றவில்லை என்கிறார் தாயுமானவர்.*

*அருளால் எவையும் பார்என்றான்;அத்தை*
*அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;*
*இருளான பொருள்கண்ட தல்லால், கண்ட*
*என்னையும் கண்டிலன் என்னேடி, தோழி*

*என்பது தாயுமானவரின் அங்கலாய்ப்பு.*

*நாம் இறைவனை அடையத் தடையாய் இருப்பவை ஆணவம் - அஹங்காரம், கன்மம் - நமது பிராரப்த வினைகள் மற்றும் வாசனைகள், மாயை - நாம் ஆத்மாவே என்பதை அறியாமல் 'நான் உடம்பு மனம் அறிவு' என்று எண்ணும் அறியாமை என்னும் மூன்று தடைகள். இவை நீங்க வேண்டுமெனில் அவை இறையருளால் மட்டுமே கூடும்.*

*102. இருளைக் கடிந்துஇன்று இறைவன் அருளால்*
*தெருளும் சிவசிந்தை யாம்.*

*பொருள்: இங்ஙனம் இறைவன் அருளை நம் உள்ளத்தினை ஆட்கொள்ள, அக்ஞான இருள் அழிந்து, சிவபோதம் தெள்ளத் தெளிவாகத் துலங்கும்.*

*103. வாய்மையால் பொய்யா மனத்தினால் மாசுஅற்ற*
*தாய்மையாம் ஈசன் அருள்.*

*பொருள்: நம்மை உய்விக்க ஈசன் அருள்பெற நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள். 1. எப்பொழுதும் சத்யத்தையே கடைப்பிடித்தல் 2. மனத்துள் 'நான் உடல்' என்னும் பொய்ம்மையை நீக்குதல் 3. உடல் மாசுக்களை,*

*தூய்மையான ஒழுக்கத்தாலும், மனமாசுக்களை, ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் ஆகியவற்றால் நீக்குதல். இவற்றை விடாமல் கடைப்பிடித்தால் இறைவன் அருளைப் பெறலாம்.*

*பகவானும் உள்ளத் தூய்மைபெற நிஷ்காம்யமாக பற்றற்று உன் கடமைகளைச் செய்க. இதுவே இறையருள் பெற உனக்கு வழி காண்பிக்கும் என்று உபதேச உந்தியார் மூன்றாம் பாடலில் கூறுகிறார்.*

***கருத்தனுக்கு ஆக்கும் நிட்காமிய கர்மம்***
***கருத்தைத் திருத்தியது உந்தீபற***
***கதிவழி காண்பிக்கும் உந்தீபற***

***104. ஒவ்வகத்துள் நின்ற சிவன்அருள் பெற்றக்கால்***
***அவ்வகத்துள் ஆனந்த மாம்.***

***பொருள்:** இங்ஙனம் மேற்சொன்ன வழியைப் பின்பற்றினால் நம் இதயத்தில் எப்போதும் வீற்றிருக்கும் இறைவன் அருள் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். அப்போது நம் இதயத்துள் ஆனந்தப் பிரவாஹம் பெருக்கெடுக்கிறது.*

***105. உன்னும் கருமம் முடிக்கலாம் ஒள்ளிதாய்***
***மன்னும் அருள்பெற்றக் கால்.***

***பொருள்:** இங்ஙனம் நிஷ்காம்ய கர்மமாய் நமது செயல்களைச் செய்யும்போது இறைவன் நம் உளத்தில் நீங்காது நிலைபெறுகிறான். அப்போது இதயத்துள் பொங்கும் அவன் அருளால் நாம் எண்ணிய செயல்கள் யாவும் நம் முயற்சி இன்றியே எளிதாய் நிறைவேறும்.*

***விளக்கம்:** இறைவன் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தன்னை அருள்பெறத் தக்கவர் ஆக்கிக் கொண்ட சாதகர்களது நோக்கம் அனைத்துமே இறைவன் அருளால் மூன்றும் நிறைவேறும் என்பது திண்ணம்.*

***அன்னிய சிந்தை அணுவும் இலாது, என்னையே***
***உன்னி எவர் உபாசிப்பார் - என்னிலே***

என்றும் ஒன்றும் அன்னவர்தம் யோகக்ஷேமங்களை
என்றும் தரித்திடுவேன் நான்

என்பது பகவான் பகவத் கீதா சாரம் 31ஆவது பாடலில் நமக்கு அளிக்கும் உறுதிமொழி.

106. எல்லாம் பொருளும் முடிக்கலாம் ஈசன்தன்
தொல்லை அருள்பெற்றக் கால்.

பொருள்: (இதுவும் முன்னால் கண்ட பாடலின் பொருளையே கூறுகிறது)

இறைவனின் எல்லையற்ற அருளைப் பெற்றால் நாம் என்றும் எந்த நோக்கத்திலும் வெற்றி பெறலாம்.

விளக்கம்:

ஈசன்அருள் பூட்கையால் எம்முயல்வும் இன்றியே
மாசறுமார்ச் சால மரபினால் - பாசமற
இம்மையில் ஞானசித்தி எய்தினோர் மர்க்கடம்போல்
அம்மையிலே ஆட் செய்தவர்.

— குருவாசகக் கோவை, 696

மார்ச்சால மரபு: ஒரு பூனைக்குட்டியானது, எந்த முயற்சியும் செய்யாமல் தனது தாயையே முழுதும் நம்பி, அது தன்னை வாயில் கவ்விச் செல்லும்போது கவலையின்றி தன்னை முழுதுமாக ஒப்படைக்கின்றது. மர்க்கட நியாயமானது தான் பாதுகாப்பான இடத்தை அடைய தன் தாயைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு தன் சொந்த முயற்சியைச் சார்ந்து நிற்கும் குரங்குக் குட்டியின் வழி.

ஆண்டவன் அருளுக்காக உண்மையில் ஏங்கி கடவுளிடம், பூரணமாகச் சரண் அடைந்து ஏகபக்தி பூணுவதால் ‘நான்’ தன்முனைப்பு அழிந்து, மனம் முழுத் தூய்மை அடைகிறது. ’நான் செயல்புரிவோன்’ என்ற கர்த்ருத்வம் அழிந்து, பூனைக் குட்டியின் நிலையில் தன்னைக் கவர்ந்து இதயத்துள் கொண்டு செல்லும்

*அருள் வெள்ளத்தில் மூழ்குகிறது. அந்நிலையில் அச்சாதகன் எண்ணும் எச்செயலும் வெற்றி அடைகிறது.*

*107. சிந்தையுள் நின்ற சிவன்அருள் பெற்றக்கால்*
*பந்தமாம் பாசம் அறும்.*

*பொருள்: இங்ஙனம் நம் சிந்தையுள் வந்து அருள்கொண்டு நிலைபெற்ற இறைவனது அருள் நம்மைச் சூழும்போது இதுகாறும் நம்மைக் கட்டி வைத்திருந்த பற்றுக்கள் என்னும் கயிறுகள் அறுபடும்.*

*விளக்கம்: 'பாசமாம் பற்றறுத்துப் பார்க்கும் ஆரியன்' என்று சிவபிரானை மணிவாசகர் ஏத்துகிறார்.*

*அஸங்க[3] ஶஸ்த்ரேண த்[3]ருடே4ன சி[2]த்த்வா (பகவத் கீதை, 15-4)*

*நன்றாகத் திடமான உலகப்பற்றில் வேரூன்றிய ஜீவபோதம் என்னும் மரத்தை, பற்றின்மை என்ற வாளால் வெட்டி வீழ்த்துக என்கிறார் கண்ணபிரான்.*

*இந்தப் பற்றின்மை என்ற வாளை இறைவனே என் கையில் தந்து உலகப்பற்றை வெட்டச் சொன்னான் என்கிறார் தாயுமானவர்.*

*வந்த வரவை மறந்து மிக்க*
*மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும்*
*இந்த மயக்கை அறுக்க எனக்கு*
*எந்தை மெய்ஞ்ஞான எழில்வாள் கொடுத்தான்*

*என்பது தாயுமானவர் வாக்கு.*

*108. மாசற்ற கொள்கை மதிபோலத் தான்தோன்றும்*
*ஈசன் அருள்பெற்றக் கால்.*

*பொருள்: ஈசன் அருள் பெற்றவுடன் மனதில் உள்ள மாசுகள் வாசனைகள் அனைத்தும் நீங்கி, அது மாசு அற்ற முழுமையாய் ஒளிரும். சந்திரன்போல் ஒளிமயமாய்ப் பிரகாசிக்கும்.*

*109. ஆவாஎன்று ஓதி அருள்பெற்றார்க்கு அல்லாது*
*தாவாதோ ஞான ஒளி.*

*பொருள்: இறைவனை ஆழ்ந்து தியானித்து அவன் அருள் பெற்றவர்க்கு அல்லாமல், ஏனையோர்க்கு ஞான ஒளி தோன்றாது.*

*110. ஓவாச் சிவன்அருள் பெற்றால் உரையின்றித்*
*தாவாத இன்பம் தரும்.*

*பொருள்: முடிவே இல்லாத பூர்ணமாகிய சிவனருள் பெற்று விட்டவர் பேச்சும், எண்ணமும் அடங்கி, பூர்ண மௌனத்தில் மூழ்கி, இடையறாத பேரானந்தத்தில் திளைத்திருப்பர்.*

*விளக்கம்:*

*சித்த மௌனம் மனோவாக்கு எலாம் மௌனம்*
*சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரமே!*

*என்று இந்த மனம்வாக்கு கடந்த நிலையில் பரம்பொருள் நம் இதயத்தில் பிரகாசிக்கும் என்று தாயுமானவர் குறிப்பிடுகிறார்.*

---

# இனிவரும் திருநாட்கள்

## 2021

| | | | |
|---|---|---|---|
| *ஜனவரி* | 14 | *வியாழன்* | *பொங்கல்* |
| | 28 | *வியாழன்* | *சின்னசுவாமிகள் ஆராதனை* |
| *மார்ச்* | 03 | *புதன்* | *சுந்தரம் ஐயர் தினம்* |
| | 19 | *வெள்ளி* | *ஸ்ரீவித்யா ஹோமம்* |
| *ஏப்ரல்* | 13 | *செவ்வாய்* | *தெலுங்கு வருடப் பிறப்பு* |
| | 14 | *புதன்* | *தமிழ் வருடப் பிறப்பு* |
| | 21 | *புதன்* | *ஸ்ரீராம நவமி* |
| *மே* | 09 | *ஞாயிறு* | *பகவான் 71ஆவது ஆராதனை* |

# சப்ரிஜிஸ்திரார் நாராயண அய்யர் (தொடர்)

**வி.நிரஞ்சன்**

*சிந்தைக்கு அரிய சிவன் சிந்தைக்கு எளிதாக*
*முந்தைத் தவத்தால் என் முன் தோன்றிவித்தை காண்*
*மானுடனேயாக மதித்துப் பல்லோர் மருளக்*
*கால் நிலம் தோய்ந்து என்னைக் காத்தான்*
*முருகனாரின் ஸ்ரீ ரமண ஞான போதம்*
*3ம் பாகம் பக்கம் 15*

*நாராயண அய்யர் சாதாரண மக்களின் பிரதிநிதியாகவே தோன்றுகின்றார். அவர் சாஸ்திரங்கள் கற்றது இல்லை. ஆன்மீகம் தொடர்பாக எந்த ஒரு சாதனையையும் செய்தவர் இல்லை. இறை பக்தியும் அவரிடம் ஒரு சடங்காகவே இருந்திருக்கின்றது. ஆங்கிலக் கல்வியும் மேலை நாட்டுக் கண்ணோட்டமுமே அவரை மாற்றியிருந்தன.*

*ஆதலால்தான் பகவானிடம் முதன் முதலாக பக்திசிரத்தை இல்லாதவராகத்தான் வருகின்றார். ஆனால் அன்றைய இரவு பகவானின் சன்னிதியில் நிகழ்ந்த நிகழ்ச்சி அவரது மனதில் ஓர் அடிப்படை மாற்றத்தை நிகழ்த்திவிட்டது. தன் முன்னே தோன்றும் ரமணர் இறைவனே என்றும் சற்குருவே என்றும் உறுதிபடத் தெளிந்து கொண்டார். பகவானின் மீது அதீத பிரேமை கொண்டார். கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் பகவானுக்கு அருகிலேயே இருந்து அவருக்குப் பணிவிடை செய்வதே தனக்குப் பாக்கியம் என்று உறுதி பூண்டார்.*

*பகவானைச் சற்குருவாகப் பெறுவதற்கு, தான் எவ்வகையிலும் தகுதி உடையவன் அல்லன் என்கின்ற*

*அளவிற்குத் தாழ்ந்து போனார். தூய தவசிகள் சாதகர்கள் பக்திமான்களுக்கு இடையில் தன்னைப் போல் தாழ்ந்த ஒருவனை பகவான் கனிவும் பரிவும் கொண்டு அருள் புரிந்து வருவதை எண்ணி எண்ணி உளம் நெகிழ்ந்தார். இவ் வுணர்வுகளை கணேசன் (ரமண பெரியபுராணம் என்னும் சீரிய நூலின் ஆசிரியரும், பகவானின் இளைய சகோதரர் நிரஞ்சனானந்த சுவாமியின் புதல்வர் டி.என். வேங்கடராமன் அவர்களின் குமாரரும் ஆவார்.) அவர்களிடம் அடிக்கடி சொல்லிச் சொல்லி உருகியிருக்கின்றார். (கணேசனது ரமண பெரிய புராணத்தில் நாராயண அய்யரைப் பற்றிய விளக்கக் கட்டுரை இருக்கின்றது.)*

*இது தொடர்பாக ஒரு நிகழ்ச்சியை எல்லா மைலார்ட் பதிவு செய்திருக்கின்றார். எல்லாவைப் பற்றிய தொடர் இதற்கு முன் இவ்விதழில் வெளியிடப் பட்டுள்ளது. ஒருநாள் கூடத்தில் சப்ரிஜிஸ்திரார் நாராயண அய்யர் பகவானிடம் ஒரு கேள்வியை எழுப்பினார். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கருமங்களில் ஒன்றைக்கூடச் செய்யாத அவர் பகவானின் பாதங்களையே புகல் எனக் கொண்டு அடைவதற்கான அதிர்ஷ்டம் உள்ளவரானது எப்படி என்பதே அந்தக் கேள்வி. “ஓய் உமது பூர்வ ஜன்மங்கள் வளமாய் இருந்திருக்கின்றன. சில ஜன்மங்களில் உம்மை இங்கே கொணர்ந்து சேர்ப்பதற்கு எது தேவையோ அதை நீர் செய்திருக்கின்றீர்,” என்று பகவான் அவரிடம் உறுதிப்படுத்துகிறார். பகவானின் இந்த உறுதிமொழி பகவானைச் சிரத்தையோடு சரணடைகின்ற பக்தர்கள் அனைவருக்கும் பொருந்தும் அல்லவா?*

*பிறவி என்பது தேக மனோ போகங்களில் திளைத்து இறுதியில் நிறைவில்லாமல் மரித்துவிடுவதில்லை. பூரண சத் சித் ஆனந்தமே தனது இயல்பு என உணர்ந்து தெளிதலே, அத் தெளிவினால் பிறவித் தளையில்*

*இருந்து நிரந்தரமாய் விடுதலை அடைவதே வாழ்வின் தலையாய நோக்கம்.*

*இந்த உண்மையை வலியுறுத்தி ஆன்ம ஞானம் அடைவதற்கான வழிகளாகிய ஞானத்தையும், பக்தியையும், அதாவது விசாரத்தையும், சரணாகதியையும், உபதேசித்து முக்தி அடையும் வரை உள்ளே ஆன்மகுருவாகவும் வெளியே சற்குருவாகவும் விளங்கும் பகவான் ரமணரை கதியே என்று உண்மையாய் அடைக்கலம் புகுந்தோர் பூர்வ ஜன்மங்களில் நிச்சயம் புண்ணியம் செய்திருப்பர் என்பதில் ஐயமே இல்லை.*

*ஈசனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புண்ணிய பலன்கள் சித்த சுத்தியை உண்டாக்குகின்றன; சித்த சுத்தி சற்குருவின் சன்னிதிக்குக் கூட்டிச் செல்கின்றது; சற்குருவின் போதனைகளும் வழிநடத்துதலும் ஆன்ம சாக்ஷாத்காரத்தில் நிறைவுபெறுகின்றன. இந்தக் கிரமத்தின் அதி முக்கியமான நிகழ்ச்சி சற்குரு சன்னிதி கிட்டலே. நாராயண அய்யரைப் போல் பாக்கியசாலிகளான நாம் அனைவரும் உள்ளும் வெளியும் நிலவும் ரமண சன்னிதியின் கனிவான கண்காணிப்பில் ஸ்வசொருபானுசந்தானம் திடமாகப் பயிற்சி செய்து நித்த சித்த ஆனந்த சொருப ஸ்திதியில் இரண்டற்று ஏகமாய் உய்வோமாக.*

*நாராயண அய்யர் பகவானிடம் தயக்கம் இல்லாமல் தனது சந்தேகங்களைக் கேட்டுவிடுவார். பகவானும் அவருக்கு எளிமையான விளக்கங்களை அளித்துவந்தனர். ஒருமுறை நாராயண அய்யர் பகவானிடம், பகவானே ஜகஜீவ ஈசுவரர்கள் பொய் என்கின்றீர்கள். இந்த உலகம் பொய் என்கின்றீர்கள். அப்படியானால் இந்தக் கூடம் பொய்யா? இங்கு அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் பொய்யா? நான் பொய்யா? இந்த சோபாவும் பொய்யா? இந்தத்*

*தடுப்பும் பொய்யா? ஏன் சோபாவில் அமர்ந்திருக்கும் நீங்களும் கூடப் பொய்யா? என்று கேட்டார். அதற்கு பகவான் "ஓய்! இதில் என்ன சந்தேகம்? எல்லாம் பொய் தான். இவை எல்லாவற்றையும் தன்னிலிருந்து தோற்றுவித்து தன்னிலேயே மறைத்துக்கொள்கின்ற சத் வஸ்து ஒன்றுதான் ஓய் மெய், என்று தெளிவாக்கினார்."*

*நாராயண அய்யர் பகவானிடம் மேலும் கேட்டது: பகவான், நாம் அனைவரும் பொய்யாகவும் உண்மை இருப்பு இல்லாதவராகவும் இருக்கமுடியுமா? தயவு செய்து என்னைத் தெளிவுபடுத்துங்கள்.*

*இவ்வாறு வேண்டிய அய்யர் மேலும் நிகழ்ந்ததைப் பின்வருமாறு கூறுகின்றார். புன்னகைத்தவாறு பகவான் என்னிடம் முந்திய இரவு கனவு ஏதேனும் கண்டேனா எனக் கேட்டனர். நான் பலர் உறங்கிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டேன் என்றேன். பகவான் தொடர்ந்தார்: நான் உம்மை உறங்கிக் கொண்டிருக்கும் அவர்களிடம் போய் அவர்களை எழுப்பி அவர்கள் எல்லாம் உண்மை இல்லை என்று அவர்களிடம் சொல்லச் சொன்னால் அது எவ்வளவு மடமை. அது போலத்தான் இது எனக்கு இருக்கின்றது. கனவு காண்பவனைத் தவிர்த்து வேறு ஒன்றுமே இல்லை. ஆதலால் கனவில் கண்ட அவர்கள் உண்மையா பொய்யா என்கின்ற கேள்வி எங்கிருந்து எழுகின்றது? அதற்கும் மேலாக அவர்களை எழுப்புவதற்கும் அவர்களிடம் அவர்கள் உண்மை இல்லை பொய் என்று சொல்லுவதற்கும் எங்கே இடம் இருக்கின்றது? நாம் எல்லோரும் அசத்தியமே.இதில் என்ன சந்தேகம்? அது ஒன்று தான் சத்தியம்."*

*பகவானின் அந்த உறுதி மொழிக்குப் பிறகு சுட்டுப் பொருகளாகிய இந்த உலகத்தின் பொய்மையில் தனக்குச் சந்தேகமே இல்லாது போயிற்று என்கின்றார் அய்யர்.*

*இன்னொரு சமயத்தில் அவரிடம் பகவான், "ஞானி என்று ஒருவன் இல்லை; ஞானம் ஒன்றே*

*உள்ளது” என்று உறுதிபடச் சொன்னார். இது ஒரு மகாவாக்கியமே. சுருங்கச் சொன்னால் பகவானுடைய வாய்மொழி அனைத்துமே மகாவாக்கியங்களே.*

*ஜீவன்முக்தனைப் பற்றி பகவான் கொடுத்த விளக்கத்தை அய்யர் தருகின்றார், ஜீவன் முக்தன் எண்ணங்கள் சங்கல்பங்கள் அற்று இருப்பவன். எண்ணுதல் அவனிடம் முற்றிலும் இல்லாது போய்விடுகின்றது. ஒரு சக்தி அவனைக் காரியங்களைச் செய்யவைக்கின்றது. அவன் கர்த்தா இல்லை. அவன் மூலம் காரியங்கள் செய்விக்கப்படுகின்றன.*

*ஞானியின் செயல்பாடு பற்றி பகவான் பின்வருமாறு அய்யருக்கு விளக்கம் அளிக்கினறார். எல்லாமே கனவுப் பொருட்கள் போல் அசத்தியமே. இருந்தும் ஒரு கட்டத்தில் உண்மை அதாவது சத்வஸ்துவும், உலகு அதாவது அசத்தும் [இணைந்து] இருக்கின்றன. அக்கட்டத்தில் காண்பதுவும் உணர்வதுவும் அசத் என்றும், மெய்ப்பொருள் என்பது அவரவர் சொரூபம் என்றும் தெளிவித்து ஞான விழிப்பை ஓர் அஞ்ஞானியின்பால் நிகழச்செய்வதே ஞானியின் கடன். யானை ஒன்று அதன் கனவில் சிங்கத்தைக் கண்டு மிரண்டு விழித்துகொண்டு, அந்தச் சிங்கம் பொய் என்றும், தான் மட்டுமே மெய் என்றும் கண்டுகொள்கின்ற நிகழ்ச்சியை இதற்கு உவமையாகக் கொள்ளலாம்.*

*சாஸ்திரங்களைக் கற்றுத் தேறவில்லையே என்று அய்யர் மனம் வருந்திய வேளையில் பகவான் அவரைப் பின்வருமாறு வழிப்படுத்துகின்றார்: “சாஸ்திர ஞானம் என்பது வெறும் உமிதான். புத்தகப் படிப்பு, சாஸ்திரங்களை மனனம் செய்து ஒப்பிப்பது, இவற்றால் ஒரு பயனும் இல்லை. உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டு சாஸ்திரங்களைக் கற்கவேண்டிய தேவையே இல்லை.”*

*இவ்வாறு கூறிய பகவான் தொடர்ந்து பின்வரும் அழகு மிகுந்த சொற்றொடர்களை அருளினார் என்கின்றார் அய்யர்: "படிப்பதால் உண்மையை அடைந்துவிட முடியாது. சும்மா இரு அதுதான் உண்மை. சலியாதிரு அதுதான் கடவுள்."*

*தொடர்ந்து பகவான் அய்யரிடம், "நீர் முக ஷவரம் செய்து கொள்வதுண்டல்லவா?" என்று கேட்டனர். பகவான் திடீரென்று இப்படிக் கேட்டவுடன் அய்யர் வியப்படைந்தார். ஆம் என்று பகவானுக்கு விடை அளித்தார். பகவான் தொடர்ந்தார்: "முக ஷவரம் செய்து கொள்கின்ற பொழுது கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு தானே ஷவரம் செய்து கொள்கின்றீர்கள்?" அதற்கும் அய்யர் ஆம் என பதில் சொல்ல பகவான் தொடர்கின்றார்: "கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு உமது முகத்தை ஷவரம் செய்துகொள்கின்றீர் இல்லையா? கண்ணாடியில் தெரியும் முகத்திற்குச் ஷவரம் செய்வதில்லை அல்லவா? அதுபோல் எல்லா சாஸ்திரங்களின் நோக்கமும் மெய்ப்பொருளை அடைவதற்குரிய வழியைக் காட்டுவதே. அவற்றின் இலட்சியம் பயிற்சியும் மெய் ஞான அடைவுமே. வெறும் புத்தகப் படிப்பும், வாதங்களும், ஒருவன் கண்ணாடியில் தோன்றும் தனது முகத்தை ஷவரம் செய்வதற்கு ஒப்பாகும்." எளிய உவமை பெரிய உபதேசம்.*

*நான் உள்ளே இருப்பது. சாஸ்திரங்கள் வெளியே இருப்பவை. சாஸ்திரங்களைப் பார்த்தால் சாஸ்திர ஞானம் கிட்டும். பாண்டித்தியத்திற்கான பெருமையும் கிட்டும். ஆனால் உள்ளே ஆன்மாவைப் பார்த்தால் ஆன்ம ஞானம் கிட்டும் துக்கம் போம் சதானந்த சுகமே தானாய் இருக்கும், என்னும் பொருளில் பகவான் அண்ணாமலை சுவாமிக்கு ஒருமுறை இவ்வுண்மையை எளிமையாகவும் உறுதிபடவும் தெரிவித்ததை நினைவுகூரலாம்.*



# கிரிவலம் எனும் ஞான யாத்திரை

**ஸ்ரீ ரமணதாசன்**

'தூர விலக்காத துவைத விருத்தி' எனும் ஸ்ரீ சாது ஓம்சுவாமிகளின் சிறு வாக்கியம் எனக்குள் திறப்பை ஏற்படுத்தியது. பல்வேறு கதவுகளைத் திறந்து விட்டது. அதன் விளைவே இந்த கட்டுரைத் தொடர் என்று சொல்லலாம். இந்த வாக்கியத்தின் உட்பொருளை அடுத்தடுத்து வரும் கட்டுரைகளில் விளக்குவேன்.

எப்போதுமே குருவானவர் நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ அங்கிருந்து நகரவே சொல்லுவார். ஆனால், பலருக்கு தான் எங்கு நிற்கிறோம் என்று தெரிவதில்லை. உலகம், நான், கடவுள், என்பது குறித்த விசாரமும் எழுவதில்லை. அல்லது ஏதேனும் புள்ளியிலிருந்து தத்துவ விசாரணையோ, நேதி நேதி என்பதே குருவின் ஆணைதான். நான் இது அல்ல நான் இது அல்ல என்றே நகரவேண்டும். எனவே, எங்கு நின்று கொண்டிருக்கிறோம். எங்கு சென்று சேரவேண்டும் என்கிற லட்சியார்த்தம் உருவாக வேண்டியிருக்கிறது. எங்கும் செல்ல வேண்டாம். நீயே

*அதுதான். இருந்தபடிக்கே இரு என்பதெல்லாம் மனம் உள்முகமாகவோ அல்லது வெளிப்புற அலைதலின் ஓய்வாகவோ இருக்கும் காலகட்டத்தில் தெளிவாகும். ஆனால், இறை என்கிற ஆழமான தேடல் இல்லாமல், வாழ்வதன் அர்த்தம் என்று ஏதேனும் இருக்குமா என்கிற அடிப்படை கேள்விகள் இல்லாமல் இருப்போரை நகர்த்தத்தான் வேண்டும். மரபு, சம்பிரதாயம், தத்துவம், வேதாந்தம் என்று பல கட்டங்களாக நகரத்தான் வேண்டும். சக்கரத்தை மையத்திலிருந்து சகடத்தின் சுழற்சி சிக்கல்களிலிருந்து மெதுவாக அதிலிருந்து வெளியேற வேண்டும்.*

*''நானும் பௌர்ணமி பௌர்ணமி கிரிவலம் வரேன். நான் வேண்டிக்கறதெல்லாம் நடக்குது'' என்று சொல்பவர்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். இப்படிச் சொல்பவர்களோடு மேலும் பேச நிறைய இருக்கின்றது. நான் ஞானமார்க்கத்தில் ஈடுபாடு உடையவன். எனவே, இங்கு வருகிறேன் என்று கூறுபவரோடு பகிரவும் சில விஷயங்கள் உண்டு.*

*அருணாசலத்தைக் குறித்த விஷயங்களை மிகச் சாதாரண லௌகீக தளத்தில் வைத்து, கூறிவிட்டு அரோகரா... என்று பாவனையாக வணங்கி விட்டு நகர முடியாது. ''நான் தர்க்க வழியில் ஈடுபாடு உடையவன். சாதாரணமான ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடு வருவதற்காக மலையையே சிவமாகச் சொல்லி சுற்றச் சொல்லியிருப்பார்கள். மலையை வலம் வருதல் என்பது மிகவும் அடிப்படையானது'' என்றும் போகிற போக்கில் பேசிவிட முடியாது. மேலும், ''மன அமைதிக்காக நான் திருவண்ணாமலை போகிறேன்'' போன்ற வார்த்தைகள் தற்போது தேய்ச் சொற்களாக மாறிவிட்டன. ஏனெனில், இதுபோன்ற வார்த்தைகளெல்லாம் தேய்ச் சொற்களாக உபயோகப்படுத்தப்பட்டு ஆன்மிகத்தின் உண்மையான இலக்கையே அறியவிடாது ஆகியிருக்கிறது. அமைதி,*

*நிம்மதி போன்ற வார்த்தைகளைக் கூறும்போது மிகச் சாதாரணமான பொருளில் அது தொனிக்கிறது. ஏனெனில், அமைதிக்காக இங்க வரேன் என்று சொல்வீர்களானால், ''நீங்க எங்க இருந்தாலும் அமைதியாகவே இருக்கலாம். அது உங்க கையில இருக்கு'' என்று ஒற்றைவரியில் பதில் சொல்வார்கள். மனஅமைதி என்பதே மிகவும் தற்காலிகம்தான். மனதை வைத்துக் கொண்டு அமைதி என்பது ஆன்மிகத்தின் உயர்தளத்தில் சாத்தியமில்லை. அதனால்தான் ஞானிகள் பூர்ணத்துவம், ஜீவன் முக்தி, அத்வைதானுபவம் என்றெல்லாம் பல பெயர்களில் ஞானமடைதலைக் கூறுகிறார்கள். மனம் என்று ஏதேனும் உள்ளதா? என்கிற கேள்விகளை கேட்டுக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். எண்ணங்களின் ஒட்டுமொத்த தொகுதிக்குத்தான் மனம் என்றும், அதை ஒருங்கிணைப்பதே நான் எனும் ஒரு எண்ணம் என்பதும் தெரியவரும். அந்த நான் என்கிற எண்ணத்தை மனம் சார்ந்தும், உடலோடு ஐக்கியப்படுத்தியும் சொன்னால் அதற்குத்தான் அகங்காரம் என்று பெயர். ஆன்மிகத்தின் தீவிரத் தளத்தில் பொழுதுபோக்குக்கான ஆன்மிகம் இல்லை. ''எனக்குக் கொஞ்சம் ஆன்மிகத்தில ஆர்வம் உண்டு ஸார்'' என்பவர்களே நம்மிடையே நிறைய உண்டு. அப்போ சந்நியாசம் வாங்கிகிட்டு போயிடணுமா என்றும் கேட்கலாம். அப்படியெல்லாம் போய்விடவும் முடியாது என்பது ஒருபக்கம் இருக்கட்டும்.*

*அப்படிப் போய்த்தான் ஜீவன் முக்தி கிடைக்கும் என்று சொல்லப்படவில்லை. ஏனெனில், உண்மையான சந்நியாசமே அகங்காரம் அழிந்தபின் ஏற்படுவதுதான். மற்றபடிக்கு வெளியுலகு சார்ந்த சந்நியாசம் என்பது ஆன்மிகத்தில் ஒரு நிலையில் இருப்பதைக் காட்டுவதாலும், தன்னைப் பார்ப்பவர் ஆன்மிக வழியில் சென்று கொண்டிருக்கிறார் என்று தெரிந்து*

*கொண்டு தொந்தரவு கொடுக்காமல் இருப்பதற்குமான வழியே ஆகும். இன்னொன்று இல்லற வாழ்க்கையை உதறி வருவது என்பது பிராரப்தப் பிரகாரம் சிலருக்கு விதிக்கப்படுவதாகும். இப்போது இருக்கும் நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறித்தான் முக்தியை அடைய வேண்டுமென்று எங்கும் சொல்லப்படவில்லை. கனிந்த உடனேயே காம்பை விட்டு விலகும் வெள்ளரி போன்றதுதான் முக்தி. இருக்கும் இடத்தில் அகங்காரம் அறுக்கப்பட்டுவிட்டது. அது எங்கு உற்பத்தியானது அங்குபோய் அழிந்து கலந்துவிட்டது. அவ்வளவுதான்.*

*செல்வம் வேண்டுமா அருணாசலத்திற்கு வாருங்கள் என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எனக்குத்தான் நிறைய செல்வம் இருக்கிறதே என்று எண்ணுபவர் செல்வத்தைக் கேட்க அருணாசல மலையை ஏன் வலம் வரவேண்டும் என்று நினைக்கலாமல்லவா! கோயிலுக்கு எதுக்கு ஸார் போகணும். நிம்மதியா இருக்கோம். தேவையான பணம் இருக்கு. யாருக்கும் மனசு அறிஞ்சி துரோகம் பண்ணலை. வேறென்ன வேணும் என்று சொல்லும் நல்ல உள்ளங்கள் உண்டே! அப்போது அவர்களுக்கு அருணாசலம் வேண்டாமா என்ன? உண்மையில் பார்த்தால் அவர்களும் குறையோடுதான் வாழ்கிறார்கள். நீங்கள் வசிக்கும் அறையில் சில சமயம் பாம்பு வந்துபோகும். ஆனால், அது உங்களைக் கடிக்கவில்லை. அவ்வளவுதான். லௌகீகத் தேவைகளால் ஏற்படும் நிறைவும், போதுமென்ற மனப்பான்மையால் ஏற்படும் தெளிவு மட்டுமே வாழ்வின் இறுதியான குறிக்கோள் அல்ல. அதேபோல இன்பங்களால் உங்கள் வாழ்க்கை நிறைவடைவது இல்லை. எல்லாவற்றுக்குமான மூலமான கேள்வியைக் கேட்டு நான் யார் என்று அறிவதே ஒட்டுமொத்த வாழ்க்கையின் குறிக்கோள். இந்த குறிக்கோள் திடப்படுவதற்குத்தான் அருணாசலம்.*

அதனாலேயே, அருணாசலம் என்ன தரும் எனும்போது ஜீவன் முக்தியை அளிக்கும். மனம் என்கிற மாயையை அறுத்து மனோநாசத்தைக் கொடுத்து உங்களின் சொந்த சொரூபமான ஆத்ம சொரூபத்தை தரிசிக்கச் செய்யும் என்றே அதை உச்சியில் வைத்து ஞானியர் பேசியிருக்கிறார்கள். இதனாலேயே பல தலங்களின் உண்மையான மகத்துவமும் அந்த க்ஷேத்ரங்களின் அந்தரிக்ஷம் எப்படி ஜீவனுள் செயல்படுகின்றன போன்ற விஷயங்களும் மறைந்து விடுகிறது.

அருணாசலம் எனும் மலையுருவில் இங்கிருக்கும் பெரும் வஸ்து என்ன செய்யும் என்பதை இதற்கு முன்பு இந்த தலத்தில் வாழ்ந்த ஞானிகளை வைத்தே பார்க்க வேண்டும். மிக முக்கியமாக பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் உபதேசத்தை ஒட்டியே அருணாசலத்தைப் பார்க்கிறேன். மஹரிஷி உரைக்கும் அருணாசலம் ஆன்மாவே ஆகும். அது இங்கு கிரியுருவில் நிமிர்ந்துள்ளது என்கிற விஷயத்தையே மீளமீள சொல்லியிருக்கின்றார்.

அருணாசலமானது ஒரு ஜீவனை ஆத்ம சொரூபத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது. சொந்த வீட்டிற்கு, சொரூபத்திற்கு விரையச் செய்கிறது. போதும் போகலாம் என்று அகங்காரம் ஆட்டத்தை முடித்துக் கொண்டுவிடும். உள்ளிருப்பதற்கு இதெல்லாம் போதும் என்றாகிவிடுகிறது. ஏனெனில், மேல்மனத்தை தாண்டி உள்ளிருக்கும் அந்தரங்க மனம் அருணாசலம் தன்னை உரசிய பின்னர் இந்த முடிவை எடுத்து விடுகிறது. நாகம் எப்போதும் வாலைத்தான் முதலில் புற்றுக்குள் கொண்டு போகும். புற்றின் மேல் குழியிலிருந்து வெளியே பார்த்துக்கொண்டே வாலிலிருந்து மொத்த உடலையும் இழுத்துக் கொள்ளும். கடைசியில் தலையையும் உள்ளுக்குள் சொருகிக் கொள்ளும். மேல் மனத்திற்கு

இந்த விஷயங்களெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றது என்கிற உண்மை தெரிய வர பக்குவிகளை பொறுத்து கொஞ்ச காலம் பிடிக்கிறது. பின்னர் மேல்மனதும் உள்முகமாகும். அப்போது இன்னொன்றும் புரியும் யாரோ தன்னை உள்ளுக்குள் தரதரவென்று இழுத்துப்போவது புரியும். இழுத்ததே நாந்தான்! என்று தெரியவரும்போது மனம் நாசமாகிவிடும். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார், நரேந்திரன் வரும் வரை அவன் எப்போது வருவான், அவன் அப்படி வருவான்.. என்று ஏதேனும் பேசிக் கொண்டிருப்போம். ஆனால், வந்துவிட்ட பின்னர் அவ்வளவுதான். அவனைப்பற்றி பேச முடியாது. சாப்பிட்டுவிட்ட பின்னர், புர்...புர்... என்று வெறும் உறிஞ்சல்தான். அதுபோல இங்கு வந்த பிறகு மனமே இனி போதும் என்று முடிவெடுப்பதை உணரலாம்.

வேதங்கள் சொல்கிற கர்மா மாதிரி கிரிவலமும் ஒரு கர்மாதானே. தினமும் இந்த பூஜையை செய்யுங்க என்பதுபோன்ற விஷயம்தானே என்று விவாதிக்கலாம். ஆனால், அருணாசலத்தை வலம் வருதல் கர்மா அல்ல. கர்மா யாருக்கு என்று பார்க்க வைக்கும் பர்வதம் இது. நாளெல்லாம் வேதாந்த தத்துவத்தை விவாதிக்கலாம். வேதம் தப்பு. வேதாந்தம்தான் சரி என்று ஒன்றின் தொடர்ச்சியை நறுக்கியெறிந்துவிட்டு புத்திசாலிகளாக வளைய வரலாம். வேதத்துல சொல்ற கர்மால்லாம் புரோகிதர்களுக்கு ஆதாயம். ஜீவனை எந்த விதத்திலும் மாத்தாது என்று ஒற்றைவரியில் ஒட்டுமொத்த வேதத்தையும் தூக்கிப் போட்டுவிட்டு பேசுவதற்கு யார் இருக்கிறார்கள் என்று தேடி ஓடலாம். ஆனால், சீர்தூக்கி வேதாந்தத்தின் மையத்தை வேதம் எந்தெந்த பாதைகளின் வழியே அடைகின்றன என்கிற தெளிவும் முக்கியம். வேதங்கள் மனதினுடைய சித்தசுத்திக்காக எந்தெந்த வழியெல்லாம் சொல்கின்றன என்பதும் முக்கியம். இன்று நம் வாழ்வில் நம்மையும் அறியாமல் கடைபிடித்து வரும் பல்வேறு விஷயங்கள்

*வேதங்களிடமிருந்து முன்னோர்களால் பரம்பரை பரம்பரை கடத்தப்பட்டிருக்கிறது. வாழ்வில் தனியாக இல்லாது சிறு சடங்கிலும், பெரிய ஹோமங்களிலும், தியானத்திலும் என்று ஊடுபாவாக இருக்கிறது. வேதாந்தம் எனும் என்கிற பாதை வழியே வரும் விதத்தை நோக்க கொஞ்சமாகிலும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அல்லது வேதாந்தம் கூறும் வித்யைகளை நடைமுறை வாழ்வினுக்குள் கொண்டுவந்து அதை வாழ்வது என்றும் இருக்கிறது.*

*சாத்திரமானது தன் உயரிய நிலையில் ஓர் அத்யாத்ம சாத்திரமாகவும் ஆத்மீகக் கலையாகவும் ஆகிறது. சாத்துவிக இயற்கையையும் கடந்து செல்ல விதி அமைக்கிறது என்கிற அரவிந்தரின் வாக்கியங்கள் மிக முக்கியமானவை. இது வாழ்க்கை குறித்த சவால்களை எதிர்நோக்கும் சக்தியைக் கொடுக்கும் தலமல்ல. அப்படி இருந்தாலும் அது இந்த தலத்தின் இலக்குமல்ல.*

*வாழ்க்கையின் அடிநாதம் எது? ஏன் வாழ்கிறோம்? எதற்காக இந்த வாழ்க்கை? என்னால் பார்க்கப்படும் உலகம் என்பது என்ன என்று சற்றே ஆழமாக கொண்டு செல்லும் தலம் இது. வாழ்க்கையைப்பற்றி பலநூறு முறை பல்வேறு நபர்களால் தொடுக்கப்பட்ட வினாவிற்குத் தட்டையான பதில்களும் கொடுக்கப் பட்டுக்கொண்டே வருகின்றன. ஆனால், வாழ்க்கையை யார் வாழ விரும்புகிறார். வாழ்க்கையை பற்றி யார் வினா தொடுக்கிறார்? ஏன் இவர் வாழ்க்கையை வாழ வேண்டுமென்று விரும்புகிறார்? அப்படி விரும்பும் இந்த நபர் யார் என்பது ஊடாக பல்வேறு கேள்விகளைத் தோற்றுவித்து பதில்களை அளித்து பின்னர் அவை இரண்டையும் ஒருசேர எரித்துவிடும் ஞானமலை.*

*ஏனெனில், பிரமாண்ட புராணம் கூறும் அருணாசல வலத்தையே மீண்டும் பகவான் ரமண மஹரிஷி நடத்திக் காட்டினார்கள். அதைத் தொடர்ந்து பகவான்*

யோகிராம்சுரத்குமார் வரையில் எண்ணற்ற மகான்கள் அருணாசலத்தின் அண்மையில் வாழ்ந்திருக்கின்றனர்.

அறிவியல் தகவலொன்று எத்தனையோ கோடி வருட பழமையான மலை என்கிறது. நம் மரபிலுள்ள எத்தனையோ படிமங்களில் உதாரணமாக சிவலிங்கம் போன்றதொரு விஷயமே இந்த மலை என்கின்றனர். இயற்கையை வணங்கினர் நம் முன்னோர்கள். அதுபோலத்தான் இது என்கிறார்கள். ஆன்மா அசையாதது. சலனமற்றது. அதையே இங்கு மலையாக உருவகித்துள்ளனர் என்கிறார்கள் ஒருசாரார். சரி, இத்தனை ஞானிகளும் இந்த மலையை இப்படிச் சொல்லியிருக்கிறார்களே! அப்படி என்னதான் இது என்று பார்த்துவிடுவோமா என்று எளிய தொடக்கத்தை தொடங்கினால் கூட போதும். நான் சொன்ன உடனேயே எளிய பக்தியில் இருப்பவர்களோடு செய்ய மாட்டேன். என்னுடைய அகம் திருப்தியுறும் வரையிலும், என் தர்க்கத்தின் எல்லைவரையிலும் சென்று விட்டு பிறகுதான் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னாலும் பரவாயில்லை. உங்களின் அகங்காரத்தைக் கொண்டு மலையோடு மோதுங்கள். அதைத்தானே புராணத்தில் மகாவிஷ்ணுவும், பிரம்மாவும் இத்தலத்தில் செய்தனர்.

வரும் இதழிலிருந்து நாம் கிரிவலம் எனும் ஞான யாத்திரையைத் தொடங்கும் முன்பு, இந்தத் தொடருக்கான சற்றே ஆழமான இந்த முன்னுரையை நாம் புரிந்துகொண்டு முன்னே நகர்ந்தால் புராணக் கதைகளின் மகத்துவமும் புரியும்.

அஜநாப வர்ஷம், பாரத வர்ஷம், பரத கண்டம், பாரத தேசம், இந்தியா என்று பல்வேறு திருப்பெயர்களில் அழைக்கப்படும் இத்தேசம் மிகவும் ஆச்சரியமிக்கதாகும். மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு இந்த தேசத்தைப்பற்றிய அருமை புரியாது போகும்.

*அப்போது பாரத தேசத்தை எந்த அளவுகோளில்தான் அளப்பது?*

இந்த தேசத்தின் ஜீவநாடியாக, அடிநாதமாக ஆன்மிகம் என்கிற பெரிய மரபு யுகங்களாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆன்மிக மரபே நம் தேசத்தை ஆதியிலிருந்து அடையாளப்படுத்தும் விஷயமாகும்.

*சரி, இந்த ஆன்மிகம் எதை மையமாக வைத்து நிறுவப்பட்டுள்ளது?*

வேதங்களைக் கொண்டு?

*வேதங்கள் எதை மையமாகக் கொண்டுள்ளது?*

வேதாந்தத்திடம் கொண்டுபோய் சேர்க்கிறது?

*வேதங்கள் எப்படி வேதாந்தங்களிடம் கொண்டு போய் சேர்க்கிறது?*

வேதங்கள் கர்ம காண்டம். ஞான காண்டம் என்று இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

வேதங்கள் சொல்லும் கர்மாக்களை ஏதோ ஒருவிதத்தில் இந்த தேசத்தில் உள்ளவர்கள் செய்து கொண்டுதான் இருப்பர். அல்லது அதை நோக்கியே இங்கிருப்போர் ஏதோ ஒரு காலத்தில் செலுத்தப்படுவர். இந்தக் கர்மாக்களை செய்து செய்து சித்தசுத்தி என்கிற மனமாசுக்கள் இல்லாத நிலையை அடைந்தோர் வேதங்கள் இறுதி பாகமான வேதாந்தத்திற்குள் நுழைவர்.

*சரி, இந்த வேதங்கள் யாரால் இயற்றப்பட்டன?*

இது எவராலும் இயற்றப்படவில்லை? அண்டம் எனும் அகண்டத்திலிருக்கும் மந்திரங்களை ரிஷிகள் கிரகித்தார்கள். அவற்றை வியாஸர் நான்காகப் பிரித்துத் தொகுத்தார்.

அடேயப்பா? இவ்வளவு விஷயங்களும் எப்படி ஒருவருக்குப் புரியும். ஒரு பாமரனால் இதையெல்லாம் புரிந்து கொள்ள முடியுமா? ஏதோ சிக்கலான கணக்குபோல கசக்கும் போலிருக்கிறதே? இப்படிப் போய்த்தான் இந்திய ஆன்மிக மரபை புரிந்து கொள்ள வேண்டுமா? வேறு வழியே இல்லையா?

ஏன் இல்லை? இவ்வளவு சூத்திரங்களையும் நமது தேசம் அழகாக எளிமைப்படுத்தியிருக்கிறது. கர்ம காண்டம், ஞான காண்டம் என்கிற பெயரைக் கூட சொல்லாது கைமேல் கனியாகப் புராணங்கள் எனும் கதை ரூபத்தில் இந்த தேசத்தில் இத்தனை கடினமான விஷயங்களை கொழுக்கட்டைக்குள் பூர்ணம்போல கொடுத்திருக்கிறது. இந்த தேசத்தின் ஆன்மிக மரபையும், கலாச்சாரத்தையும், தர்மங்களையும், வேத, வேதாந்தங்களையும், யோக ரகசியங்கள் அனைத்தையும் கதை எனும் எளிய சர்க்கரை தடவியே ஆதிநாளிலிருந்து சொல்லப்பட்டபடியே வந்து கொண்டிருக்கிறது.

அணுகுண்டின் அழுத்தம் மிகுந்த மாபெரும் வேதாந்தக் கதைகளை குழந்தைக்கு சோறு ஊட்டும்போது ஒரு தாய் சொல்லி விடுவாள். பத்து வயதுவரை கதையாக இருக்கும். இருபது வயதுக்குப் பிறகு ஏதோ இந்தக் கதைக்குள் இருக்கக் கூடும் என்கிற நம்பிக்கை பிறக்கும். முப்பத்தைந்து வயதிலிருந்து அது என்னதான் சொல்கிறது என்று கதைக்குள் நுழைந்து தேடத் துவங்குவோம். நாற்பது வயதுக்குப் பிறகு ஒரே கதைக்குள் இத்தனை விஷயங்களா என்று விழியை விரிக்க வைக்கும். இந்தக் கதைக்குள் இவ்வளவு ஆழம் உள்ளதோ என்று திகைக்க வைக்கும். அப்போதே அந்தக் கதை குருவாக ஆசனமிட்டு இருதயத்தில் அமரும். அதுவே போதிக்கவும் துவங்கும். தான் சீடனாகி தன் வாழ்க்கையை கதையின் ஆழத்திற்குள் செலுத்தி பயணப்பட்டு விடுவான். விதைக்குள் ஒளிந்திருக்கும்

விருட்சம்போல கதைக்குள் ஒளிந்திருக்கும் ஒளியின் கிரணத்தை சூட்சுமமாகப் பற்றியபடியே நடக்கிறான். இப்போது அந்த ஒரு கதை பல்வேறு பரிமாணங்களில் தன்னிலிருந்து கிரணங்களை பாய்ச்சியவாறு தரிசனத்தை கொடுத்துக் கொண்டேயிருக்கும். கூம்பியிருந்த தாமரை இதழ்கள் விரிவதுபோல கதையின் ஒவ்வொரு இதழ்களையும் தத்துவம் எனும் நோக்கில் பிரிக்கப் பிரிக்க மலர்ந்த தாமரையாக இறை தரிசனம் வரை சென்று விடுகிறான். ஏனெனில், இந்தக் கதை எனும் மாத்திரைக்குள் மிக வீர்யமாக மகான்கள், ஞானிகள் தமது சக்தியை அதாவது தம்முடைய பேரருளைப் பொதித்து வைத்திருக்கிறார்கள் எனும் உண்மையை இறை தரிசனம் பெறும்போது ஒரு ஜீவன் உணர்ந்து விடுகிறான். இதற்கு உதாரணங்களாக சர்வ சாதாரணமாக இராமாயண, ஸ்ரீமத் பாகவத, மகாபாரத இதிகாசங்களைக் கூறலாம்.

சரி, அப்போது கதையை மட்டும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?

கதையை நன்றாகக் கேட்டவர்களால் அதோடு நிற்க முடியாது? கதையின் மையமான இறை எனும் விஷயம், அந்த மாபெரும் ஆத்ம வஸ்து ஆங்காங்கு கோயில்களாக நிலைபெற்றிருப்பதை கதை கேட்டவன் அறியாது இருக்க மாட்டான். இப்போது நீ கேட்டாயே இந்தக் கதை எங்கு நடந்தது தெரியுமா என்று ஓர் இடத்தையும் அது சுட்டிக் காட்டும். அதை நமது தேசத்தில் தலம் அல்லது க்ஷேத்ரம் என்பார்கள். ராமாயணத்தைப் பருகியவனுக்கு ராமர் கோயிலை நோக்கி தமது யாத்திரையை தொடங்குகிறான். ஈசனின் அளவிலா மகத்துவத்தைக் கேட்டவன் சிவாலயத்தை நோக்கி நகருவான். தன்னை இறுதியில் சிவத் தொண்டனாக்கிக் கொள்வான். இப்போது கதை எனும் விஷயம் கோயிலாக உருக்கொள்கிறது. கோயிலின் மீதான ஈர்ப்பு பக்தியாகப்

*பரிமளிக்கிறது. பக்தி எனும் விதை உள்ளுக்குள் விழுந்தவுடனேயே அது பிரேமை எனும் பித்தாக ஒரு ஜீவனை சூழ்கிறது. மெல்ல மெல்ல அது அந்த ஜீவனை உருக்குகிறது. பித்து பிடிக்க வைக்கிறது. ஏக்கம் கொள்ள வைக்கிறது. அந்த பக்தியே ஞானம் எனும் பேரறிவாக ஒளிர்ந்து அந்த ஜீவனின் அகங்காரத்தை அழிக்கிறது. எனவே, பக்தி என்பதே ஞானத்தின் ஈர்ப்பு சக்தியாக செயல்படுகிறது. ஞானம் என்பது இருப்பு எனில் பக்தி என்பது அதன் இழுப்பாகும். இறையைக் காணவேண்டுமெனில் அகங்காரம் அழிய வேண்டும் என்கிற விஷயத்தை ஒரு சிறிய கதை மிக எளிமையாகப் போதித்தது. பின்னாளில் அதைக் காதால் கேட்ட ஒரு ஜீவனையே அது அழித்துவிட்டது. இங்கு அழித்தல் என்பது மோட்சத்தை அடைந்தது என்று பொருள்.*

*இதுவே பாரத தேசத்தில் நடக்கும் மிக சூட்சுமமான வேள்வியாகும். எனவேதான் முனிவர்கள், ரிஷிகளும், ஞானிகளும், பாகவதர்களும் முதலில் கதையைக் கேளுங்கள் என்கிறார்கள். இதைத்தான் ஆதிசங்கரர் தனது முதல் போதனையாக ஸ்ரவண பக்தி, அதாவது காதால் அமுதமயமான இறைவனின் கதைகளைக் கேட்டல் என்று வைத்திருக்கிறார். அழகுத் தமிழில் இதையே கற்றலின் கேட்டல் நன்று என்று கேட்டலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஸ்ரீமத் பாகவதத்தில் ''தவ கதாம்ருதம் கிருஷ்ணா....'' என்று கதைக் கேட்டலையே தவமாகச் சொல்லியிருக்கிறது.*

*இந்த திருக்காஞ்சி முதல் திருவண்ணாமலை வரையிலான இந்த தொடருக்கு ஏன் இத்தனை விஷயம் எனில், ஒரு சிறிய கதையின் தோற்றுவாயே இங்குத் தலங்களாக, கோயில்களாக விரியப் போகின்றன.*

*அந்தக் கதைதான் என்ன?*

*வெகு சுலபம். பதினைந்து வரிகளுக்குள் கதை முடிந்து விடுகிறது.*

அது கயிலாயம். கற்பக வனங்களும், ரத்தினங்கள் இழைக்கப்பட்ட ஸ்தம்பங்களும் உயர்ந்திருந்தன. எல்லாவற்றையும் தாண்டி விசாலமான சபா மண்டபத்தை பார்வதி அடைந்தாள். ஈசன் கயிலையில் தனிமையில் அமர்ந்திருந்தார். கண்கள் இமைக்காது திறந்திருந்தன.

ஈசனோடு விளையாட வேண்டுமென்கிற ஆசையை அவளின் தனிமைச் சுதந்திரம் பார்வதிக்குக் கொடுத்திருந்தது. இதென்ன சும்மாவே இருக்கிறார் என்று ஈசனின் கண்களை பார்வதி மூடினாள். சட்டென்று பிரபஞ்சத்தின் இயக்கம் முற்றிலும் தடைபட்டது. சூரிய, சந்திரர்களே ஈசனின் திருக்கண்களாக இருப்பதால் பிரபஞ்சம் இருளில் மூழ்கியது. எங்கேயோ யார் யாரோ என்று, பிரபஞ்சம் முழுவதும் இனம் புரியாத வேதனைகளில் மூழ்கின. ஒரு அந்தகார இருளில் எல்லோரும் தள்ளப்பட்டனர். பார்வதி தேவி சட்டென்று கைகளை விடுவித்து விலக்கிக் கொண்டாள். ஈசன் மீண்டும் கண்கள் திறந்தார். சட்டென்று கோபம் கொண்டார். வேகமாகப் பேசத் தொடங்கினார்.

''பார்வதி, விளையாட்டு எத்தனை விபரீதமாயிற்று பார்த்தாயா. நீ செய்தது மிகப் பெரிய தவறு. அதுமட்டுமல்ல பாவமும் கூட'' என்று கோபம் கண்களில் கொப்பளித்தது.

''தயவுசெய்து என்னை மன்னியுங்கள். விஷயத்தின் தீவிரம் புரியாது விளையாடிவிட்டேன். தாங்களே இதற்குரிய வழிகளையும் கூற வேண்டும். இனி தவறே செய்ய முடியாத நிலையென்று எது உள்ளதோ அந்த நிலைக்கான வழியை கூறுங்கள்'' என்று கண்களில் நீர் கொப்பளிக்கப் பேசினாள்.

''என்னுருவான உன் பொருட்டு சொல்ல எனக்கு எந்த வழி உள்ளது? ஆனாலும் உலகத்தை அனுசரித்து உனக்குப் பிராயச்சித்தத்தை உரைக்கிறேன். பூவுலகில்

ஏழு மோட்ச புரிகளில் ஒன்றான காஞ்சிக்குச் செல். கம்பா தீர்த்தம் எனும் புண்ணிய தீர்த்தமும், மாமரமும் உண்டு. அந்த மரம் எப்போதும் இளமையானது. அதன் கீழமர்ந்து தவமியற்று. மீண்டும் சரியான காலத்தில் நான் உன்னை ஏற்றுக் கொள்வேன்'' என்று ஆசி கூறினார்.

இந்தக் கதையின் மேலடுக்கு இது. இதற்குள் எத்தனை உள்ளடுக்குகள் உள்ளன என்பதையும் பார்ப்போம். இதன் உள்ளடுக்குகளை நுணுக்கிப் பார்க்கும் கவனத்தையும் குருவருள் தொடர்ந்து கொடுக்கும். இதுவே இந்தக் கதையின் மையத்தை நோக்கிச் செல்லும் தேடல்.

முதலில் ஈசனின் கண்ணை பார்வதி பொத்தினாள் என்பதே விளையாட்டான விஷயமில்லை. ஒரே பிரம்மமாக அசலமற்றிருக்கும் சிவத்தை சக்தி சலனப்படுத்துவதையே இது குறிக்கிறது. அதாவது ஞானமே உருவாக இருக்கும் பிரம்மத்தை, மாயை எனும் இருள் மூடியதுபோல ஒரு தோற்றத்தை காட்டுவதே இந்த நிகழ்வு. இங்கு சூரிய சந்திரர் என்பதெல்லாம் ஞான சூரியனும், ஞான அமுதத்தை பொழியும் சந்திரனுமேயாகும். இடையறாத ஞானப் பொழிவை சக்தி இடைநின்று தடுப்பதே ஜீவர்களின் மாயா அவஸ்தையாகும். மேலும், சக்தி கண்ணைப் பொத்தினாள் என்பதே பிரிவற்ற ஏகமாக உள்ள சக்தியானது சிவத்திலிருந்து தான் அந்நியமானது போன்ற ஒரு பாவனையை தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்கிறது. தோற்றமாத்திரமான பிரமையை சக்தி அடைகிறது. ஆனால், ஒருகாலும் சக்தி பிரியாது. அதாவது இப்போது ஜீவனாகிய நாம் ஒருக்காலும் பிரம்மத்தை விட்டு விலகுவதில்லை. தான் உடல் என்கிற தேகத்தின் மீதுள்ள தேகாபிமானத்தால் பிரம்மம் எங்கேயோ இருக்கிறது என்கிற பிரமை ஏற்பட்டு விடுகிறது. ஒன்றாகவே உள்ள சிவசக்தி

*பிரிவதுபோல காட்டப்படும்போது சிவமான பிரம்மம் மறைந்து வெறும் கல்லும் மண்ணுமாக உள்ள உலகமாக, பிரபஞ்சமாக விரிவடைகிறது. இனி சக்தியானவள் மீண்டும் சிவனோடு சேரவேண்டும். சேருவதற்குண்டான அந்தக் கிரியைகளைத்தான் தியானம், தவம், பூஜை, வழிபாடு, பிரேமை என்றெல்லாம் அழைக்கிறோம்.*

*அது சரி, ஏன் இவ்வாறு சிவத்திலிருந்து பிரிந்து நான், நீ, அவை என்று சக்தி மாற வேண்டுமெனில் அதற்கு பதில் கிடையாது. தேவி மகாத்மியம் இதை சக்தியின் மகாலீலை என்கிறது. தானே தன்னைத் தொலைத்துக் கொண்டு மீண்டும் தன்னையே கண்டடைகிறது என்கிறது. அப்படிப் பார்த்தோமானால் நாமும் அந்த சக்தியின் திவலைதான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எப்போதோ நாம் சிவத்திலிருந்து பிரிந்திருக்கிறோம். இப்போது இணையப் போகிறோம். இதற்கு நடுவே உடல், உலகம், மாயை என்று எத்தனை கட்டுக்கள். இதை அத்தனையையும் எப்படி உடைப்பது என்பதற்காகவே அந்தப் பார்வதிதேவி பூவுலகிற்கு வருகிறாள். அதுவும் நம் பிரதிநிதியாக வருகிறாள்.*

*பார்வதிதேவி தன் தவறு புரிந்து பரிதவித்தாள். ஈசனோடு இணைய வேண்டுமே என்று பெருங்கவலை கொண்டாள். பூலோகத்திலுள்ள பெரும் நகரமான காஞ்சி என்கிற கச்சியை நோக்கினாள். அந்த அடர்ந்த மாமரங்கள் சூழ்ந்த இருள் காடுகளிடையே மெல்லிய பூவாய் மென்மையாய் வந்திறங்கினாள். ஈசனைப் பிரிந்த ஒரு ஏக்கத்தில் மெல்லியவளாய் மாறியிருந்தாள். அங்கிருந்த ஒற்றை மாமரத்தடியில் நின்றாள். அண்ணாந்து அந்த மரத்தையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.*

*— தொடரும்*

# ஆதிரை நாயகன் சிதம்பரேசன்

**சியாம் சங்கர்**

01. இடம் கொண்ட உமையுடன்
விடம் பருகிய நீலகண்டன்
ரிடபம் மீதமர்ந்த ஈசனவன்
படம் பதித்து மனதில் தோன்றிடும்
தில்லையம்பல நடராஜன் சிதம்பரேசன்

02. கனக சபாபதி உமை மணாளன்
சனகாதி முனிவர் தேவர் படைசூழ
இனம் காணா இன்பம் கொண்டு
மனம் காணும் தில்லை நாதன்
தில்லையம்பல நடராஜன் சிதம்பரேசன்

03. உடுக்கை ஒலியிலே வேதம் உண்டாக
கடுக்கக் காலுடன் வானவர் உனைத்தொழ
மிடுக்கு நடனம் மேலோங்கி ஆட
படுமரம் தழைக்க வரமிடும் வேந்தன்
தில்லையம்பல நடராஜன் சிதம்பரேசன்!

04. ஆதிரை நாயகன் அருள் சிதம்பரேசன்
ஜோதி ரூபன் தில்லை அம்பலத்தான்
வேதியன் வேதமதில் மனமயங்கியவன்
நாதியற்ற எனை தாங்கி நிற்பவன்
தில்லையம்பல நடராஜன் சிதம்பரேசன் !

05. நந்தனார்க்கு இனியவன் நர்தன நடேசன்
கந்தனின் தந்தை கலியுக வரதன்
எந்தன் மனக்கோயிலின் மூலவர் அவன்
பந்த பாசமதை நொடியினில் களைபவன்
தில்லையம்பல நடராஜன் சிதம்பரேசன் !

# முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள்

## உரைஞர்: ரமணசுந்தர்ராஜன்

*பல்லாயிரம் பாடல்களால், ரமண பகவானின் அருள் வழியைப் பாடி, உலக மக்கள் சுகம் பெற, பலவித உத்திகளைக் கொண்டு முருகனார் பாடியுள்ளார் என்கிறார் நடனானந்தர்.*

*முருகனாரின் 25000 பாடல்களும் அனுபவங்களே என்றாலும், பல பாடல்கள் அவர் அனுபவித்த ஆனந்தப் பேற்றை நாமும்அனுபவிக்க உதவியாய் உள்ளவை.*

*முருகனாரின் அனுபவம் என்ன, அதனை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அலசிப் பார்ப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். முருகனாரின் பாடல்களில் இதுவரை அதிக பட்சம் நான் அனுபவித்தது, பாடலைப் படிக்கும்போதே ஏற்படும் இன்ப மயக்கம். கண்கள் சொருகி, ஒருவித ஆனந்த உணர்வு ஒருகணப் பொழுது ஏற்படும். அதனைத் தாண்டி அனுபவிக்க வேண்டியவை நிறையவே உள்ளன.*


*ரமணானந்த அனுபவங்களை முருகனார் பாடல்களில் தேடுவோம். வாருங்கள்.*

### முருகனாரின் அனுபவங்கள் -1

#### பரமகவி முருகனார்

*பகவான், முருகனாருக்குப் பரமகவி என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டினாராம்:*

*நீடிய வாழ்வா நிமலன் என் உள்ளத்தில்*
*கூடினான் கூடிக் குதூகலமாக இயல்*
*பாடினான் பாடிப் பரமகவி என்னும் பேர்*



***சூடினான் பாடியது நான் போலத் தோன்றவே.***

***ஸ்ரீ ரமண ஞான போதம் முதல் பாகம். பாடல் எண் 11.***

***(ஆக்கியோன் கூற்று)***

*நிமலன் (குற்றமில்லாதவன்) பகவான், முருகனார் உள்ளத்தில் குதூகலமாய்க் கூடி, தன் இயல்பைப் பாடத் தொடங்கினான். அவனே பாடியவன்; ஆனால்*

நான் பாடினேன் என்று உலகினருக்குச் சொல்லுகிறான் ரமண தயாளன். அத்தோடு நிற்காமல் பரமகவி என்னும் பட்டத்தையும் எனக்குச் சூட்டினான் என்கிறார் முருகனார்.

முருகனாரின் அவையடக்கம் ஆச்சரியத்தில் நம்மை ஆழ்த்துகிறது. தான் வேறு, முருகனார் வேறு என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாம் ஒன்றாய்ப் பார்க்கும் பகவானையும், அதை அப்படியே ஆதரிக்கும் சிஷ்யன் முருகனாரையும் சேர்த்துப் பார்த்தால் மனம் ஒடுங்கிப் போகிறது.

ஸ்ரீ ரமண ஞான போதம், நம் 'நானை' நாமே கொல்லத் தூண்டுகிறது. தானாய் விளங்கத் தானாகவே செய்கிறது. நெஞ்சுரம் உள்ளவர்களுக்கு மட்டும் தான் இறைவன் தன்னை வெளிப்படுத்துவார் என்று உபநிடதம் முழங்குகிறது. ஸ்ரீ ரமண ஞான போதமும் ஒரு பெரிய ரமண உபநிடதம் ஆகும். நேற்று எனக்கு வந்த Whatsapp பதிவுகள், நெஞ்சுரம் மிக்க ரமண பக்தர்களை எனக்கு அடையாளம் காட்டிற்று. 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற ரமணப் படையின் பேராற்றலை உணர்ந்து கொண்டேன். தீரர்களே! (தீரர் என்ற சொல்லின் சரியான பொருள், புத்தி மிக்கவர்கள் என்பதாகும்.) வாருங்கள். முருகனார் மூலம், ரமணனை, இறைவனை உணர்ந்து ரமித்து வாழ்வோம்.

பரமகவியின் பொருள்:

மேலான பரம்பொருளைப் பாடியதால் முருகனார் பரமகவி ஆகிறார். பரமன் ரமணனைப் பாடியதால் முருகனார் பரம கவி ஆகிறார். இனிமேல் நாமும் முருகனாரை 'பரம கவி' என்று போற்றுவோம்.

## எனக்குத் தகுதி உண்டா

அனுபூதி பாட அருகதை எற்கு உண்டோ
என ஏதிலார் வினவ வேண்டாமூமூஅனுபூதி

***வள்ளலாம் தெய்வ அருள் வல்லாளன் சிற்சத்தி***
***வெள்ளமாம் இந்நூல் விளைவு.***

***— ஸ்ரீ ரமண ஞான போதம்***
***3ஆம் பாகம். பாடல் எண் 2.***

*முருகனார் பேசுகிறார்:*

*"என்ன அனுபூதியெல்லாம் பாடுகிறார், ரமணானு பூதியாமே, இவரென்ன அருணகிரி நாதரா, அனுபூதி பாட; இவருக்கு என்ன தகுதி இருக்கிறது" என்றெல்லாம் பகவானோடு தொடர்பில்லாத வர்களெல்லாம் கேள்வி எழுப்புகிறார்கள். அப்படி யெல்லாம் பேச வேண்டாம். முதலில் பகவானைப் புரிந்து கொள்ளுங்கள்.*

1. *"பகவான் எனக்கு மட்டுமல்ல, தன்னை அண்டினவர்கள் எல்லாருக்கும் ஆன்ம ஆனந்த அனுபவங்களை அள்ளி வழங்குபவர். அதுவே பல பேருக்குத் தெரியாது.*
2. *பகவான் தெய்வ அருள் பேரரசன். வலிமையாக தன் பக்தர்களைக் காப்பவர்.*
3. *இறைப் பேரறிவின் ஆற்றல் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து, அனுபூதி நூல்களாக உரு எடுத்து உள்ளது. இது தெய்வ அருள்; அவ்வளவு தான்."*

*முருகனாரின் அடக்கமான பேச்சு,போற்றத் தக்கது. அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கி, திளைத்து, எல்லோரும் இன்புற வேண்டும் என்பதுவே முருகனாரின் குறிக்கோள்.*

*நிற்போர் நிற்கட்டும்; வருவோர் வருக (பல பக்தர்கள் வருவதைப் பார்த்து விட்டேன்.) அருள் வெள்ளத்தில் நீந்தி மகிழ்வோம்.*

## என் செயல் ஜீவச் செயல் அல்ல

***வண்மை சேர் உண்மை ஒளி வாக்கில் கலத்தலால்***
***உண்மை அனுபூதி நிலை ஓதுவேன்—உள்மயல் போக்கு***

*ஆண்டான் அருளால் அதா நிகழக் காண்டலால்*
*தீண்டாது ஜீவச் செயல்.*

*— ஸ்ரீ ரமண ஞான போதம் 4ஆம் பாகம்.*
*பாடல் எண் 7.*

பகவானோடு நமக்கு நெருங்கிய உறவு ஏற்பட்ட பிறகு, நம்மால் எதுவும் செய்ய முடியாது. நம் ஜீவ அறிவு கொண்டு செய்யப்படும் வேலைகளுக்கு அங்கே வேலை இல்லை. நம் வாழ்வும், உலகமும் செயல்படுவதில் நம் பங்கு எதுவும் இல்லை என்பதும் நமக்கு உணர்த்தப் படும். எல்லாம் ரமணன் இச்சை என்பது நன்றாகவே புரியும். அதனால் ரமணரிடம் சரணடைந்து, நான் செய்கிறேன் என்ற எண்ணம் இல்லாமல் செயலாற்ற வேண்டும். இவ்வாறு நாம் வாழத் தலைப்பட்டால், ரமண மெய்ஞ்ஞானம் நமக்குப் புலப்படும். வாக்கில் வலிமையான உண்மைகள் வெளிவரும். தினமும் ரமண அனுபூதி பெருகும். ஆணவ மயக்க மனம் பொய்யென்று அதனில் இருந்து விலகி நிற்போம். எல்லாம் ரமணன் அருளால் அதுவாக நிகழும். (நான் செய்தேன் (என்ற ஜீவ அகந்தை போய்விடும். இப்படித் தான் ஒவ்வொரு ஆன்மீக அனுபவமும் தனக்கு ஏற்பட்டதாகவும், முருகனார் என்னும் நான் ஒன்றுமே செய்யவில்லை என்றும் முருகனார் அறிவிக்கிறார்.

முருகனார் தனது அனுபவத்தை எழுதுவதற்கு முன்பு தன்னிலை விளக்கம் அளிக்கிறார். அதனால் முருகனாரின் அனுபவங்களை முழுமையாக நம்பி, உள் வாங்கி, அவ்வாறே வாழத் தொடங்குவோம்.

## குரு தரிசனம்

*ஆண்டவனைக் கண்டேன் அதீத சிவத் தன்மை*
*கண்டேன்*
*காண்டல் காணாமை கடந்தேன்.*

*—ஸ்ரீ ரமண ஞான போதம் முதல் பாகம்.*
*பாடல் எண் 68.*

*பகவானை முருகனார் பார்க்கிறார். தன்னை மறக்கிறார். பார்த்தவன் இல்லாமல் போயிற்று. (கண்டவன் இன்றிட நின்றது கண்டேன். அருணாசல அஷ்டகம்–2.)*

*சிவபெருமானை முருகனாருக்குத் தெரியும். சிவபெருமானைத் தாண்டி, சிவத்தன்மையை முருகனார் இப்போதுதான் உணர்கிறார். பகவான் அசலனாய் நின்று நம்மையும் அவர் நிலையில் நிறுத்துபவர். மௌனமாய் மாற்றம் செய்யும் பகவானிடம், (உலக உபாதியோடு கூடிய பிரம்மமாம்) சிவத்தன்மைக்கும் மேம்பட்ட சிவத் தன்மையைக் காண்கிறார். உலக விவகாரங்கள் ஒன்றுமில்லாமல் ஆனது. முருகனாரின் கண்கள் காண்கின்றன. ஆனால் எதையும் ஜீவக்கண் கொண்டு பார்க்கவில்லை. அதனால் அவர் எதையும் கண்டதாகவோ காணாததாகவோ சொல்ல முடியாத நிலை. இந்த அதீத சிவத் தன்மையைத் தான் முருகனார் உணர்கிறார்.*

*ரமண பக்தர்கள், பகவானின் விஷயங்களைத் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் உதாசீனமாக இருக்க வேண்டும். உலக விஷயங்களில் கண்டும் காணாமலும் இருந்தால், காண்டல் காணாமை கடந்த நிலையை அடைவோம்.*

*பரமார்த்த ஞானப் பதத்தில் என்னை நாட்டித்*
*தருமார்த்த காமம் ஒழித்தான்.*

*— ஸ்ரீரஞாபோ. பாகம் 1. பாடல் எண் 71.*

## தர்மம் நமக்கு இல்லை

*‘ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம்சரணம் வ்ரஜ’ என்கிறார் கிருஷ்ண பகவான். இதன் பொருள், எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்னைச் சரணடை என்பதாகும்.*

*அறம், பொருள், இன்பம் என்று நாம் சொல்வது தான் ஸம்ஸ்க்ருதத்தில் தர்மம், அர்த்தம், காமம் என்று சொல்லப்படும்.*

*கடவுளை அடையக் காமத்தை விடவேண்டும். சரி, விட்டுவிடுவோம். காசு பணத்தில் ஆசை கூடாது. சரி, பொருளாசையையும் விட்டுவிடலாம். தர்மத்தையும் விடு என்கிறாரே கிருஷ்ண பகவான், இதுதான் புரிந்து கொள்ளக் கஷ்டமானது. நம்மைத் தாங்கும் தர்மத்தை எப்படி விடுவது? சாதாரண மனிதர்கள் தர்மத்தை அதாவது நீதியை விடக்கூடாது. இறைவனைச் சரணடைந்து எல்லாம் அவன் செயல் என்று வாழ்பவர்களுக்குத் தான் தருமம் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.*

*"பகவானே எனக்கு எல்லாம். நான் ரமணனைச் சரணடைந்து விட்டேன். எனக்கு தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எல்லாம் பகவானின் திருவடிகள் தான். எனக்கு தர்மம் எது என்று பகவான் தான் தீர்மானிப்பார். நான், தர்மம், அதர்மம் என்பது பற்றியெல்லாம் யோசிக்க மாட்டேன். பகவான் விட்ட வழி" என்று பகவானுக்கே தனது, உடல், பொருள், ஆவியை முருகனார் அர்ப்பணித்ததால், பகவான், அவர் வாழ்வில் தர்மார்த்த காமத்தை ஒழித்து பரம ஞானப் பதத்தில் அவரை நிலை நாட்டினார்.*

*பகவான் மீது கொண்ட பக்தியால் எல்லாச் செயல்களையும் துறந்தவனை பகவான் வழி நடத்துவார். அவனது செயல்கள் எல்லாம் பகவானே செய்யும் தர்மச் செயல்களாகும்.*

## உலகம் மறைந்தது

***தெளிய விளங்கு சிவச் செம்பிரான் பாத***
***ஒளியில் கரந்தது உலகு. — ஸ்ரீ ரஞாபோ.1.102.***

*சிவபெருமான், தான் ஆட்கொள்ளப் போகும் பக்தர்களுக்கு பாத தரிசனத்தை அருள்கிறார். பாதம் செம்பொன் போன்று ஜொலிக்கும். பகவானையோ சிவபெருமானின் பாதங்களையோ ஒருமுறை கண்டவர்கள் கொத்தடிமை போல் அன்பில் கரைந்து*

*அந்தக் காட்சியில் தம்மை முழுவதும் இழந்து நிற்பார்கள். சிவபெருமானின் பாதங்களின் ஒளி இந்த உலகையே மறந்து போகவும் மறைந்து போகவும் செய்ய வல்லது. முருகனார் சொல்கிறார்:*

*சிவபெருமானின் பாத ஒளியில் உலகம் மறைந்து போனது.இது இயல்பாக நடக்கக் கூடியது. பாத ஒளியால் சொரூப ஞானம் நிலைத்தது. சொரூப ஞானம் நிலைத்தால் உலகம் மறைந்து போகும். மறைந்து போகும் என்றால் உலகம், அதன்மீது கொண்ட பற்று, உலக ஞானத்தில் கொள்ளும் ஆவல், அக்கறை எல்லாம் மறைந்து தன்மயமாகி விடுவோம்.*

*'நான் யார்' கட்டுரையில் பகவான் சொல்கிறார்:*

*சர்வ அறிவிற்கும் சர்வ தொழிற்கும் காரணமாகிய மனம் அடங்கினால் ஜக திருஷ்டி நீக்கும் கற்பிதமான ஜக திருஷ்டி நீங்கினால்ஒழிய அதிஷ்டான சொரூப தரிசனம் உண்டாகாது. மனம் ஆத்ம சொரூபத்தினின்று வெளிப்படும்போது ஜகம் தோன்றும். ஆகையால் ஜகம் தோன்றும்போது சொரூபம் தோன்றாது. சொரூபம் தோன்றும்போது ஜகம் தோன்றாது.*

*மனத்தின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் 'தானே' மனமாய் முடியும். 'தான்' என்பது ஆத்ம சொரூபமே.*

*இன்னொரு செய்தியையும் குறிப்பிட்டு, நிறைவு செய்கிறேன்.*

*திருமங்கையாழ்வார் பெரிய திருடனாக இருந்தவர். பல உயிர்களைக் கொலை செய்ததாகத் தன் பாடலில் குறிப்பிடுகிறார். இரக்கமற்றவராக இருந்த ஆழ்வார், மகாவிஷ்ணுவாகிய பகவானிடமே திருடுகிறார். பெருமாளின் திருவடிகளில் இருந்த திருஆபரணத்தைக் களவாடக் கால் விரலைக் கடிக்கிறார். அவ்வளவு தான் சொரூப ஞானம் பளிச்சிட்டது. ப்ரக்ஞானம் என்னும்*

*பேருணர்வு மேலிட்டது. உணர்விலேயே வாழ்ந்தார். உய்வடைந்தார்.*

*பாதமே ஞான போதம் என்ற முருகனார் வரிகளுக்கு மற்றும் ஒரு சான்று.*

## சிவ அனுபவம்

*எள்ளத் தகாத பேரின்பப் பரமசிவ*
*வெள்ளமா உள்ள? விசுத்தத் திருவடிதம்*
*உள்ளக் கருவா ஒளிர்தலே அன்பர்அகம்*
*தெள்ளத் தெளிந்த*
*சிவ அனுபவம் என்பவே. — ஸ்ரீ ரஞாபோ.1.109.*

*இறைவன் ஆனந்தன்; இறைவனோடு தொடர்பு கொண்டால் நாமும் ஆனந்தமடைவோம். சிவ அனுபவம் பக்தர்கள் மனத்தில் தெளிவாக எப்படி விளங்கும் என்பதை முருகனார் விவரிக்கிறார்.*

*பரமசிவனாம் ரமணனை தியானித்தால் அமைதி ஏற்படும். ஆனந்தம் ஏற்படும். இந்த இன்பம் பேரின்பமாகும். இதனைத் தள்ளி விடாதீர்கள் என்கிறார் முருகனார். பகவானின் பரிசுத்தத் திருவடிகளை உள்ளத்தில் கொள்வோம். கொள்ளும்போது பரசிவ வெள்ளம் பெருக்கெடுக்கும். திருவடியை நெஞ்சில் தேக்குவதனால் சொரூப ஞானம் நம்மில் வெளிப்பட்டு நாம் ஒளிர்வோம். பேருணர்வே நாமாய், பேரின்பமே வாழ்வாய் நிறைய, ரமணப் பேரறிவே வார்த்தைகளாகின்றன. உள்ளக் கருவே ரமண போதமான பிறகு, அது பிறப்பிக்கும் வார்த்தைகள் ஞான வெள்ளப் பெருக்காய் அமையும். ரமண வாழ்வு பேரின்பவெள்ள வாழ்வு.*

*பகவான், நெஞ்சில் வலப்பக்கத்தில் இருப்பதாய், ஒளிர்வதாய் எண்ணிக் கொள்ளுங்கள். காலப் போக்கில் உண்மையாகவே ஒளிர்வதை நீங்கள் உணர முடியும்.*

# பேரின்ப அன்பு

*அன்புணர்வு நாளும் பொங்கு அனுபவப்பேரின்பமே எம்மான் இயல்.*

*— ஸ்ரீ ரமண ஞான போதம். முதல் பாகம். பாடல் எண் 123.*

*ஆண்டவன் இத்தகையன் எனல் என்ற தலைப்பில் இந்தப் பாடல் உள்ளது.*

*"பழகியார் அறிவர் அவன் அருட் பரிசே" (பகவானோடு பழகியவர்களுக்கு நன்றாகத் தெரியும், பகவானின் உயர்ந்த அருளின் தன்மையை.) என்று ரமண சந்நிதி முறையின் கீர்த்தித் திரு அகவலின் கடைசி வரியில் முருகனார் குறிப்பிடுகிறார்.*

*பகவானின் அருட் பரிசு என்பது பகவான் நம்மிடம் காட்டும் நிரந்தரப் பேரன்பு தான். அன்பே சிவம் என்ற கருத்தை பகவான் இயல்பாக நடைமுறைப் படுத்துவதை அவர் வாழ்வில் பார்க்கலாம். பகவானோடு பழகப் பழக, பிரபஞ்ச அன்பு என்பது என்ன என்று நமக்குப் புலப்படும். எல்லாவற்றையும், எல்லோரையும் இயற்கையாக பகவான் நேசிப்பதைக் கண்கூடாகப் பார்த்தும், இன்னும் எல்லோரிடமும் நிபந்தனையற்ற முழு அன்பைச் செலுத்தவில்லை யென்றால் நாம் இன்னும் பகவானின் பக்தனாகவில்லை என்று தான் பொருள்.*

*நம் விருப்பப்படி காரியம் நடக்கவில்லை என்பதால், பகவானுக்கு நம்மிடம் அன்பு அதிகம் இல்லை என்று நினைக்க வேண்டாம்.*

*பகவான் உங்களை நேசித்து உங்களை ஆட்கொண்ட பிறகு, அவரது அருட் பார்வையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் பதிலுக்கு பகவானை நேசிக்கத் தொடங்கினால், உங்கள் மேல் பகவான் காட்டும் அன்பும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கும்.*

*அது பொங்கும் அன்பு. பேரின்ப அனுபவம் அளிக்க வல்ல பேரன்பு. முருகனார் அனுபவித்துப் பாடியுள்ளார்.*

*நாமும் பகவானும் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு, இறுதியில் பகவானின் அன்புணர்வில் நாம் ஒன்றி, பகவானோடு அத்வைத ஆனந்த இன்பமாய், பிரபஞ்ச அன்பாய் விரிந்து நிற்போம்.*

## ஆண்டவன் முகம்

***ஊன அகப்பேய் கரக்க உள்ளத்து ஒளிர் சொருப***
***மோனமே ஆண்டான் முகம்***

***— ஸ்ரீ ரஞாபோ. முதல் பாகம். 169.***

*முருகனார் பரிபூரணமாய் பகவானை அனுபவித்திருக்கிறார். அத்வைத ரீதியாக, உயிரோடு உயிராக, பரம்பொருளோடு உறவாடிய உன்னத புருஷர். 5000 ஆண்டு கால (நமக்கு விவரம் தெரிந்த ஆண்டுகள்) இந்திய ஆன்மீகத்தில், முருகனாரின் ஆன்மீக அனுபவங்களை நூல்கள் மூலம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்றால், லட்சக்கணக்கான சுலோகங்களில் ஆன்மீகத்தை எளிமையாக உபதேசித்த வியாச பகவானோடு மட்டுமே ஒப்பிட முடியும். வியாசரின் பாடல்களில் உலகியல் உண்டு. ஆனால் உலகியலே கலக்காத, உள இயல் மூலம் உயர்ந்த ஆன்மீகத்தை உபதேசிக்கிறார் முருகனார். இது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை. முருகனார் பாடல்களுக்கு உருகாதவன், மற்ற ரமண ஆன்மீக நூல்களில் எத்தனை ஊறினாலும் முழுமையான ரமண பக்தனாக ஆக மாட்டான். முருகனாரின் நூல்கள் அனைத்துமே புனிதமானவை. அவர் எழுதிய 25000 பாடல்களும் அப்படியே போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.*

*ஆண்டவன் ரமணனின் முகமே மோனத்தின் இலக்கணம். பகவானைப் பார்த்த உடனே மோனம் நம்மிலும் நிலைபெறும். பகவானின் மோனம் சொரூப*

மோனம்; அதனால் சுக மயமான மோனம். மோனத்தில் பகவான் ஒளிர்கிறார். அதனால் பகவானின் முகம், ஒளிர் சொரூப மோனம்.

பகவானுக்கு உங்களிடமிருந்து ஒன்றே ஒன்று தான் வேண்டும். அது உங்கள் ஆணவம் அழிந்த மனம் தான். நம்மை அழிக்கும் ஆணவம் அழிய வேண்டும். மோன மூர்த்தி பகவானைச் சரணடையும்போது, அவரே நமது ஆணவப்பேயை அழித்து, தன்னுள் நம்மை ஒடுக்கிக் கொள்வார். இதுவே இறைவன் ரமணனின் கரத்தல் விளையாட்டு. மாணிக்கவாசகர் சொல்வார்: 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என்று. அந்தக் கரத்தல் இதுதான்.

ஆணவப்பேய் அடக்கி அழிக்கப்பட்டபின், பகவானின் மோனம், நம் உள்ளத்தில் நிறையும். இப்போது நாமும் ஒளிர் சொருப மோன மயன்.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 28 | வியாழன் | இரவு 1.17 | 29 | வெள்ளி | இரவு 12.45 |
| பிப்ரவரி | 26 | வெள்ளி | மாலை 3.18 | 27 | சனி | மதியம் 2.10 |
| மார்ச் | 28 | ஞாயிறு | அதிகாலை 2.54 | 29 | திங்கள் | அதிகாலை 1.01 |
| ஏப்ரல் | 26 | திங்கள் | மதியம் 12.17 | 27 | செவ்வாய் | காலை 9.59 |

### ரமணோதய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


# திரு. ரமணானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்

**Dr. A. கொண்டல்ராஜ்**

*திரு. ரமணானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் 1959-ஆம் ஆண்டு முதன்முறையாக திருவண்ணாமலை ஸ்ரீரமணாஸ்ரமம் வந்தபோது அவருக்கு வயது சுமார் 25 இருக்கும். பூர்வாஸ்ரம பெயர் சேஷாத்திரி ஆகும். 1938-ஆம் ஆண்டு ரங்கூன், பர்மாவில் பிறந்தவர். 1942-ஆம் ஆண்டு பர்மாவில் இருந்து போர்க்காலத்தில் அகதியாக இந்தியா வந்தவர். சென்னை "பெசன்ட் தியாசவிகல் சொசைட்டி மேல் நிலை பள்ளியில்" சேர்ந்து பயின்றார். திருவாளர்கள் ருக்மணிதேவி அருண்டேல், டைகர் வரதாச்சாரி போன்ற ஆசிரியர்களிடம் பயிலும் பாக்கியம் பெற்றார்.*

*தனது படிப்பு முடிந்தவுடன் கல்கத்தாவில் இருந்த தனது குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டார். அங்கு அவருடைய தந்தையார் பணியாற்றி வந்த பாலங்கள் கட்டுமானத்தொழில் செய்யும் பெரிய ஓர் நிறுவனத்தில் இவரும் சேர்ந்து பணியாற்றினார். அக்கால கட்டத்தில், பகவானுடைய நூல்கள் அவருக்குத் தற்செயலாகக் கிடைத்தன. அவை அவருடைய வாழ்வில் திருப்பு முனையானது. ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் ஆங்கில இதழான "மவுண்டன் பாத்"த்திற்கு விளம்பரம் சேகரிக்க அதன் நிர்வாகி திரு. கணேசன் அவர்கள் கல்கத்தா சென்றபோது, அவருக்கு உறுதுணையாக அவரைத் தன் இல்லத்தில் தங்க வைத்துப் பல நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று விளம்பரம் பெற்றுத் தந்தார்.*

*அவரது கால்கள் விபத்தில் பழுதடைந்த நிலையினாலும், ஆன்ம நாட்டத்தின் தீவிரத்தாலும்*



தாம் பார்த்து வந்த பணியை உதறிவிட்டு திருவருணை வந்தடைந்தார். ஆஸ்ரமத்தில் தொண்டாற்றும் பாக்கியம் அவருக்குக் கைகூடியது. சக சாதுக்களுக்கு எப்போதும் உதவக் கூடியவர். சாதனையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாலும் ஆஸ்ரமப் பணியிலும் கோயில் பணியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தம்முடைய கடுமையான உழைப்பினால் எடுத்த எந்த காரியத்தையும் சிறப்பாக முடிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

ஆஸ்ரமத்தில் இவர் இருந்தபோது ஸ்ரீ முருகனார் சுவாமிகள் வயோதிகம் காரணமாகப் படுக்கையிலேயே இருந்தார். சிறுகுழந்தை போல இருந்த அவருக்கு அருகிலேயே இருந்து ஸ்நானம் செய்வித்து, உணவு உண்ணச் செய்வது, இயற்கை உபாதைகளைச் சுத்தம் செய்வது என அனைத்துப் பணிகளையும் முருகனார் சுவாமிகள் தேகம் விடும் வரை செய்து வந்தார். அதுமட்டுமல்லாது ஆஸ்ரமத்தில் அப்போது இருந்த விசுவநாத சுவாமிகளையும் அவரது இறுதிக்காலம்வரை அருகில் இருந்து தொண்டாற்றி கவனித்துக் கொண்ட பாக்கியம் பெற்றவர். சமாதி கோவில் வைக்கும் நுணுக்கங்களை அறிந்தவராக இருந்ததால் அவர்களின் சமாதி கோவில்களை கட்டுவிக்க ரமணாச்ரமத்திற்கு உறுதுணையாக செயலாற்றினார்.

பகவான் மலைமீது சிலகாலம் வாசம் செய்த மாமரத்துக் குகை அருகே உள்ள மகாலிங்க சுவாமி குகையை முழுவதுமாக சீர்படுத்தி கும்பாபிஷேகமும் செய்து வைத்தார்.

*1973-ஆம் ஆண்டு மலை மீது உள்ள குகை நமச்சிவாயர் ஆலயத்தில் வசித்தவர், அங்கிருந்து நிருதிலிங்கத்தின் அருகில் தனது தந்தை தனக்காக வாங்கிக்கொடுத்த பூமியில் ஆஸ்ரமம் அமைத்து வாழலானார். சமூகத் தொண்டில் அவருக்கு இருந்த ஆர்வம் ஹூகோமேயர், சாய்தாஸ் இவர்களுடன் தாமும் ஒரு டிரஸ்டியாக இருந்து அப்பகுதி ஏழைமக்களுக்குத் தேவையான மருத்துவ, சமூக சேவைகளைப் பெருமளவில் செய்து வந்தார்.*

*இந்த காலக்கட்டத்தில் மலை வலம் வரும்போது உள்ள அஷ்டலிங்கங்கள் புதர் மண்டி கேட்பார் அற்றுக் கிடந்தன. அந்தக் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றவர்களால் ஆக்ரமிக்கப்பட்டு இருந்தன. திருவண்ணாமலையில் அப்போது வாழ்ந்த மூப்பனார் சுவாமிகள் பெரும் பாடுபட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றினார். அஷ்டலிங்க கோவில்கள் புதுப்பொலிவு பெற்றன. 2004 இல் அஷ்டலிங்க கோவில்களின் கும்பாபிஷேகம் நடந்தேறியது. மீட்கப்பட்ட கோவில் நிலங்கள் அண்ணாமலையார் திருக்கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பெரும் திருப்பணியில் மூப்பனார் சுவாமிகளுடன் உடன் இருந்து ஸ்வாமிகள் பணியாற்றினார். இவரின் தொண்டினைப் பாராட்டி அண்ணாமலை கோவில் நிர்வாகம் அஷ்டலிங்கத்தில் ஒன்றான வருணலிங்கம் அருகில் குடில் அமைத்து வாழ வகை செய்தது. “ரமண பாதம்” என்ற அவரின் குடிலில் பாம்புகளும், அணில்களும் குரங்குகளும் விருந்தாளிகளாக வந்து போகும். பகவானைப் போன்றே அவர் அவைகளுடன் சகஜமாக வாழ்ந்து வந்தார் .*

*அடி அண்ணாமலை கோவில் மிகவும் சிதிலமடைந்து இருந்த நிலையினைக் கண்ட இவர் அன்பர்களின் பொருள் உதவியுடன் மண்டபங்களைப் புதுப்பித்து, கோவிலின் புனருத்தாரனப் பணிகளை மேற்கொண்டார்.*

*தன் ஒருவனால் எல்லாம் செய்வித்தல் என்பது சாத்தியம் இல்லை என்று உணர்ந்து குருபீடமான ஸ்ரீ ரமணாச்ரமத்தை அணுகி அவர்களின் பெரும் பங்குடன் நீண்ட காலமாக நடக்காமல் போன மகா கும்பாபிஷேகப் பணியினை நிறைவுசெய்தார் .*

*திருவருணை மக்கள் இன்றைக்கும் மூப்பனார் சுவாமிகளையும் ரமணானந்த சுவாமிகளையும் மறக்க மாட்டார்கள்.*

*ரமணானந்த சுவாமி ஹோமியோபதி மருத்துவத்தில் ஆர்வம் உடையவர். எளியவர்களுக்கு ஏதேனும் உடல் உபாதை என்றால், மருந்து தந்து குணப்படுத்துவார். தனியாக ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்து வந்தாலும் தினமும் ஸ்ரீரமணாஸ்ரமம் வந்து பகவான் சந்நிதியில் நீண்ட நேரம் அமர்ந்து செல்வது அவருடைய வழக்கமாக இருந்தது.*

*தேகம் விடும் சிலகாலம் முன்பு மருந்துகள் எடுத்துக்கொள்வதை நிறுத்தி விட்டார். நெருங்கிய அன்பர்கள் மருந்து எடுத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தியபோது போதியகாலம் இந்த உடம்பைப் பயன்படுத்தியாயிற்று இனிமேல் பகவான் சிந்தனையில் ஒன்றி இருப்பதே செய்ய வேண்டியது என்று கூறிவிட்டார்.*

*சென்ற 10/12/2020 அன்று காலை 9.30 மணிக்கு அவர் தேகம் விடுத்தார். அதற்கு முன்பு வரை பகவானின் நினைவுடன் அருணாசல ரமண தியானத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.*

*தமது 25வயது தொடங்கி 82 வயதுவரை திருவருணையில் இருந்து அருந்தொண்டாற்றி, ஆன்ம நாட்டத்துடன் திகழ்ந்து இறுதியில் பகவான் திருவடி அடைந்து நமக்கெல்லாம் ஓர் அரிய எடுத்துக்காட்டாகும்.*

# ரமணாயனம்

## கிரேஸிமோஹன்

*வாம முழங்கை வழியாய் புகுந்தன்று*
*ஆமையாம் கான்ஸர்நோய் அண்ணலிடம் சாமியே*
*காலடியின் கூட்டத்தால் கையடியில் வந்தநானும்*
*போலடியார் தானென்றான் புற்று....(401)*

*பகவானின் இடது முழங்கையில் சார்கோமா புற்று ஏற்பட்டதைக் குறித்த பாடல்*

*பகவானின் இடது முழங்கையில் ஆமை நகர்வதுபோல மெதுவாகப் பற்றிக்கொண்ட புற்று பகவானிடம், சுவாமி! உங்கள் காலடியில் ஏராளமான பக்தர் கூடி இருப்பதால், அங்கு எனக்கு இருக்க இடம் இல்லை. எனவே, நான் உங்களது கையடியில் வந்து பற்றிக்கொண்டேன். நான் உங்களது அடியவன்தான் என்றது.*

*ஆடா(து) அசங்கா(து) அமர்ந்திருந்த உங்களை*
*மேடையென் றெண்ணிமேல் ஏறிவிட்டேன்*
*ஆடிடுவோன்*
*வாய்க்கெட்டும் ஆலம்நான் கைக்கேட்டும் மூலமும்*
*நோய்க்கட்டி ஆனதென்நன் நாள்....(402)*

*நீங்கள் ஆடாது அசங்காது ஆத்மாவில் மூழ்கிச் சிலைபோல் அமர்ந்து இருந்ததால், இதுவும் ஒரு கல்மேடை போலும் என்று எண்ணி உங்கள் மீது ஏறி அமர்ந்து விட்டேன். வாயில் வைத்து விஷம்போல் அழிக்கும் தன்மை உடைய நான், எல்லாவற்றிற்கும்*

*மூலமான உங்களது கையில் நான் புற்றுக் கட்டியாய் வந்து அமர்ந்து எனது நற்பேறு அல்லவா!*

***மாதுமையாள் கண்டத்தில் மாலையாய் சாய்கின்ற***
***போதெம்மை பூஜைக் கரடியென்றாள் ஆதலால்***
***உய்ய வழியின்றி உம்மில் புகுந்தேன்நான்***
***அய்ய அடைக்கலமுன் கை....(403)***

*நான் உமது கழுத்தில் ஆலஹாலமாய் வரும்போது உமை அம்மை நான் இறைவனை அணைக்கும் நேரத்தில் பூஜை வேளைக் கரடிபோல் வருகிறாயே என்று என்னைக் கடிந்து கொண்டாள். வேறு எங்கும் செல்ல வழி தெரியாமல், உமது உள்ளேயே அடைக்கலமாய் நான் புகுந்து விட்டேன்.*

***சிற்றின்பம் ஓடியது பேரின்பம் நாடியது***
***உற்றன்பு கொண்டூ டுறுவுமிப் புற்றின்பம்***
***ஏற்றுப் பொறுத்து எமக்களிப்பீர் முக்தியை***
***தூற்றுமூர் மூக்கை உடைத்து....(404)***

*பகவானே! உமது சந்நிதியில் சிற்றின்பத்திற்கு இடமில்லை. பேரின்பம் மட்டுமே பெறும் நோக்கத்துடன் உம்மேல் பெரும் பக்தி கொண்டு உமது தேகத்தின் உள்ளே ஊடுருவி, புற்றாய்ப் புகுந்த என்னை ஏற்றுக்கொண்டு எனக்கு முக்தி அளிப்பீர்கள். பகவான் என்போன்ற வீணர்களை ஏற்கமாட்டீர் என்று என்னும் அற்பர்கள் மூக்கை இங்ஙனம் உடைப்பீர்.*

***கொல்லும் கணைக்கூட்டம் காகுத்தன் தோளிருப்பு***
***சொல்லும் வசவும் சரஸ்வதிதான் அல்லும்***
***பகலுமிங்கு சேர்ந்திருக்க புண்ணியத்துள் இப்புண்***
***புகுதலென்ன பாவம் புகல்....(405)***

*எங்கும் நன்மையும் இன்மையும் சேர்ந்தே உள்ளன. கருணாகரனாகிய ராமன் தோளில் கொல்லும் அம்பும் வில்லும் உள்ளன. வாழ்த்தும், வசவும் இரண்டுமே சரஸ்வதியின் செயலாக வெளிப்படுகின்றன. இரவும் பகலும் சேர்ந்தே வருகின்றன. அங்ஙனம் இருக்கையில்,*

*பகவானின் பெருங்கருணை நலத்தில் இப்புற்றாகிய தீங்கும் சேர்ந்து வருகின்றது அல்லவா!*

***கர்கடக ராசிநான் கைராசி ஆனேனே***
***சற்குரு உந்தன்கை சேர்ந்ததனால் தற்பரமே***
***கையடித்து சொன்னாலுன் கைவலிக்கும் வாக்களித்தேன்***
***மெய்யடியார் மெய்யுண்ணேன் மெய்....(406)***

*(கடகம் என்றால் புற்று) கடக ராசியான நான் சத்குருவாகிய உன் கையில் சேர்ந்ததால் எனக்கும் நல்ல கைராசி வந்தது. உன் கையில் நான் இருப்பதால் நான் கையடித்துச் சொன்னாலும் உன் கைக்கு வலிக்கும் அல்லவா! எனவே நான் வாக்கினாலேயே கூறுகிறேன்: உந்தன் உண்மையான பக்தர்களுக்கு எந்தவிதமான உடல் துன்பமும் நான் இனி அளிக்க மாட்டேன்!*

***கொப்பளநோய் தன்னை குணமாக்க நீர்மனம்***
***ஒப்பிடத் தூளாகும் அப்பளமாய் சுப்பரா***
***மய்யாவாள் வேண்ட மகானுரைத்தார் மெய்யாமை***
***பொய்யாம் மனமுயல் போக்கு....(407)***

*சுப்பராமையா பகவானிடம் வேண்டினார்: பகவானே! நீர் மனம் வைத்தால் இப்புற்று நோய் அப்பளம் போல் தூள்தூளாகி விடாதா?*

*இந்த உடல்மனம்நோய் எல்லாமே பொய்தானே! அதைக் கொண்டு இதனைத் தீர்ப்பானேன்!*

***நேரிசை வெண்பாவில் சீரசைவு போனதற்கு***
***நேரிசை வானநோய் மேனியின் வாரிசே***
***நானசம் பாவிதத்தை நன்குணர்ந்த ஞானிக்கு***
***மானச சஞ்சார மேது....(408)***

*இலக்கண சுத்தமாய் இதுவரை அமைந்து வந்த நேரிசை வெண்பாவில் தளை தப்பி இப்போது இலக்கணத் தவறு நிகழ்ந்ததுபோல இந்நோய் வந்துற்றது. இந்த தேஹம் என்பதே ஒரு வியத்துதான். இந்த உண்மையை உணர்ந்த ஞானிக்கு இதனால் மனச் சஞ்சலமே ஏற்படாது.*

*அஸ்திரத்தை நோவானேன் அர்ஜுனன் எய்ததற்கு*
*சஸ்திர வைத்தியம் செய்வதேன் வஸ்திர*
*மேனிக்கு வந்ததே ஹானி எனக்கல்ல*
*ஞானிக்(கு) ஏதுடல் நெஞ்சு....(409)*

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? இந்தப் புற்று தெய்வீக சங்கல்பத்தால் நேர்ந்த ஒன்று. அதற்குப்போய் ஆபரேஷன் போன்றவற்றை ஏன் செய்ய வேண்டும்? உடல் நாம் அணியும் உடை போன்றதே. உள்ளிரும் ஆத்மா ஒன்றே மெய். ஞானிக்கு ஏது தேகமும், மனமும்? என்றார் பகவான்.

*நோய்சிரமம் ஏற்று நொடிந்த ரமணரிடம்*
*ஆசிரமம் அண்டி அறுவைக்காய் பேச*
*மயக்க மருந்தின்றி மாசை அகற்ற*
*தயக்கமில்லை என்றார் தவர்....(410)*

புற்றுநோயால் தீவிரமான உடல் சிரமத்தை ஏற்றுவந்த பகவானிடம், அடியார்கள் இதற்கு அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்க வேண்டும் என்றுகூற, சரி! மயக்க மருந்து ஏதும் கொடுக்காமல், இந்தப் புற்றை அறுவை மூலம் அகற்றலாம் என்று பகவான் சம்மதித்தார்.

*தொண்டையில் ஹம்ஸரும் தோளில் கிருத்துவும்*
*கொண்டனர் தொண்டர்தம் கர்மத்தை பண்டை*
*வினைப்பயன் ஏது விதிவசம்தான் ஏது*
*கணித்திடும் தெய்வங் களுக்கு....(411)*

ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டையில் புற்றுநோய் வந்தது. ஏசு கிறித்துவுக்குத் தோள்களிலும், கைகளிலும் ஆணி ஏற்றப்பட்டு அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவர்களுக்கு கர்மவினை ஏதுமில்லை. தொண்டர்கள்தம் கர்மமூட்டையை அவர்கள் ஏற்று, இத்துன்பத்தை அனுபவித்தனர். தெய்வ அவதாரங்கட்கு விதியோ, வினைப்பயனோ எதுவுமே கிடையாதல்லவா!

*பாவியென்று வந்தவரின் பூர்வஜென்ம கர்மமேற்று*
*கோவிலாய் மாற்றினார் கோட்டானை தாவிய*
*அப்பாவம் புற்றாக அண்ணலிடம் சேர்ந்திட*
*அப்பிரா ரப்தம் அழிவு....(412)*

தம்மைச் சரண் என்று அடைந்த அடியார்கள்தம் பூர்வ ஜன்ம கர்மச் சுமைகளை எல்லாம் தாமே ஏற்று, கோட்டான் போன்று தம்மிடம் வந்ததை, இறைவன் உறையும் கோவிலாக மாற்றினார் பகவான். அப் பிராரப்த வினைகள் பகவானில் சேர்ந்து புற்றுநோயாக மாறி அழிந்தன.

*வண்டி அமர்ந்தவன் கொண்டுவந்த மூட்டையை*
*மண்டை சுமத்தல் மதியீனம் அண்டியோர்*
*தேசிகன் தாளிடை தஞ்சம் புகுந்துவிடு*
*நீசுக துக்க நினைப்பு....(413)*

வண்டியில் பயணம் செல்வோர், அவ்வண்டியிலே அம்மூட்டையை வைக்காமல், தம் தலைமீதே சுமந்து செல்வார்களா? நமது ஸத்குருவிடம் சரணம் அடைந்து, உனது சுக துக்கங்களுக்கு நீயே பொறுப்பு என்ற எண்ணத்தையே துறந்துவிடு.

*வாமனனாய் வந்தகட்டி விக்கிரம னாய்வளர்ந்து*
*கோமணத்தர் கையில்கை கூப்பியது சாவினை*
*போவென சொன்னவர்மேல் போயின்று நாளைவந்த*
*ராவணனாய் நின்றான் ரணம்....(414)*

ஒரு சிறு கட்டியாய் வாமனன்போல் தோன்றிய புற்று, சில மாதங்களில் த்ரிவிக்கிரமன்போல் பெரிதாக வளர்ந்தது. கௌபீனதாரியான பகவானிடம் கைகூப்பிக் குடிகொண்டது. மதுரையில் தன்னைக் கவ்விய மரணத்தைப் போய்வா என்று கூறிய ரமணரிடம், இன்றுபோய் நாளை வா என்று ராமர் கூறியது கேட்டு மறுநாள் வந்த ராவணன்போல் புற்று ரணம் வந்து நின்றது.

***கள்ளுண்டோன் ஆடைமேல் கொண்ட உணர்வேயாம்***
***உள்ளுண்ட சித்தன் உடலுணர்வு புல்லுண்டு***
***மண்ணுண்டு பூச்சி புழுவுண்டு போகுமிதை***
***புண்ணுண்ட போதேன் பதைப்பு....(415)***

*மதுபோதை மிஞ்சிய ஒரு குடிகாரன் மீதுள்ள ஆடை நழுவுதல்போல், ஒரு சித்த புருஷனின் உடலுணர்வு முழுதுமாய் நீங்குகிறது. இறந்தபின், போகும் இந்த உடலை, புற்றுநோய் உண்ணும்போது ஏன் வருந்தவேண்டும் என்றார் பகவான்.*

***பலியுண்ட ஆட்டுக்கு பீடம் நெருங்கியும்***
***கிலியின்றி போகும் கதையாய் வலியுண்டு***
***கூறுவார் வாய்தவறிக் கூட வலிக்கிறது***
***கூறாராம் ஊராருக் காய்....(416)***

*பலிக்காக இட்டுச் செல்லப்படும் ஆட்டுக்குப் பலிபீடம் நெருங்கியபோதுகூட அச்சம் ஏதும் இல்லை. அதுபோல், 'உங்கட்கு வலி இருக்கிறதா' என்று வினவியவரிடம், வலி என்று ஒன்று இருக்கிறது. அது எனக்கு அல்ல!' என்றார் பகவான்.*

***வேள்வியாய் மூலிகை வைத்தியர் பார்த்தது***
***தோல்வியாய்ப் போக துவண்டாராம் கேள்வியாய்***
***கூனியவர்(கு) ஆறுதலாய் கூறினார் ''அன்பரே***
***நானிருப்பேன் உம்மால் நிலைத்து"....(417)***

*பகவானுக்கு யாகம் முதல் மூலிகை வைத்யம், சஸ்திர சிகிச்சை அனைத்தும் பயனளிக்காமல், துவண்டு போன அடியார்களிடம் பகவான் ஆறுதலாய் உறுதி அளித்தார்: "நான் எங்கு போய் விடப் போகிறேன்! நான் என்றுமே இங்கு நிலைத்து இருப்பேன்!"*

***ஜனவரியில் அண்ணல் ஜனித்த தினத்தில்***
***ஜனவரிசை கூட்டத்தில் சேர்ந்து அனைவரையும்***
***போல்யானை நட்புடன் தாள்வணங்கிச் சென்றதாம்***
***பால்யத்து தோழனைப் பார்த்து....(418)***

*அந்த ஆண்டு ஜனவரி பகவானின் ஜயந்தி அன்று திரளான கூட்டம் சேர்ந்தது. அனைவரும் பகவானை வணங்கிச் சென்றபோது, அங்கு வந்திருந்த கோவில் யானையும் தனது பால்யத் தோழனாய் விளங்கிய பகவானை வணங்கிச் சென்றது.*

*தேவை நமக்கு தயவு அனைத்திற்கும்*
*சாவை நமக்காக சுமப்பாரோ பாவை*
*உடலிதை நால்வர் திடல்வரை சேர்ப்பர்*
*இடைவெளியில் நானேன் இதற்கு....(419)*

*வருந்தும் அன்பரிடம், நான்குபேர் இறுதியில் நமக்காக இடுகாடுவரை சுமந்து செல்லும் இவ்வுடலை நான் ஏன் இன்னும் தனி ஒருவனாகச் சுமக்கவேண்டும்? என்று நகைச்சுவையாகக் கூறினார் பகவான்.*

*பண்டங்கள் நூறு பறிமாறி நாலுமிலை*
*உண்டபின் ஓரம் ஒதுக்கத்தான் பிண்டமாம்*
*வாழுமிலை மேனியிது வாழ்விலை ஆனபின்*
*வாழையிலை போலெறியும் வீடு....(420)*

*ஏராளமான பண்டங்கள் பரிமாறி உண்டு முடிந்தபின், உண்ட இலையை மூலையில் எறிந்து விடுகிறோம் அல்லவா! இந்த உடலும் அதுபோல்தான். வாழ்வின் சுவைகளை அனுபவித்தபின் உண்ட வாழையிலையை ஒதுக்கிவிடுவதுபோல், இந்த உடலையும் தேவையற்றது என்று ஒதுக்கிவிட வேண்டும.*

*இல்லாத துன்பம் இருப்பதாய்த் தோன்றவைக்கும்*
*பொல்லாத மாயையை போக்கிவிட்டு எல்லாமும்*
*சாட்சியாய்ப் பார்க்கின்ற சாஸ்வத மெய்யுணர்வே*
*மோட்சமாம் நீயதில் மூழ்கு....(421)*

*உண்மையில் இல்லாத இன்ப துன்பங்களை இருப்பதுபோல் தோன்ற வைப்பதே மாயை. அதனை ஆன்ம விசாரத்தால் நீக்கி விட்டு, 'நான்' என்ற மெய்யுணர்வே உண்மையான இருப்புணர்வு. சாட்சி*

பாவத்துடன் செயலாற்றியபின், முக்தியான அந்த மெய்யுணர்வில் மூழ்கிவிடுக.

*மணியென்ன கேட்ட மகானுடனே சொன்னார்*
*இனியென்ன காலக் கணக்கு( இழுப்பு) பணியாக*
*அன்பர்க்(கு) அளித்தார் அமைதியாய் த்யானத்தை*
*நண்பகல் வேளைஅந் நாள்....(422)*

இப்போது மணி என்ன என்று கேட்டதற்கு பகவான் உடனே சொன்னார். இப்போது எதற்கு காலக்கணக்கு? இந்த உச்சி வேளையில் நேரக்கணக்கு பார்க்காமல், அமைதியாய் தியானத்தில் மூழ்குக என்று வழிகாட்டினார்.


*ஆதவன் சாய்கின்ற அந்திப் பொழுதினில்*
*மாதவம் சாய்ந்தது மஞ்சத்தில் ஓதும்*
*அருணா சலசிவத்தை அண்மையில் காண*
*மரணாவஸ் தைக்கு முடிவு....(423)*

சூரியன் சாய்ந்த இரவு வேளையில், மாபெரும் தவவடிவாய் உதித்த பகவான் மஞ்சத்தில் சாய்ந்து மஹா நிர்வாணம் உற்றது. அருணாசலத்தில் பகவான் ஒடுங்கியது.

*எட்டுநாப் பத்தேழு ஏப்ரல் பதினாலில்*
*விட்டுடல் ஜோதி விரைவாக முட்டக்*
*கறுத்தவிரி வானை எரித்துவிண் மீனாய்*
*பரத்திடம் முக்தி பறப்பு....(424)*

ஏப்ரல் பதினான்காம் நாள் இரவு எட்டு நாற்பத்தேழு மணியளவில், உடலைவிட்டு ஆன்மஜோதி நீங்கி, இருளாய்ப் படர்ந்த வானில் எங்கும் ஒளி ஜ்வலிக்க, விண்மீனாய் விரைந்து பரம்பொருளில் ஒன்றியது பகவான் என்னும் பேரருட் சுடர்.

சுபம்



இத்துடன் 'ரமணாயனம்' முற்றுப் பெறுகிறது. பகவானின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையும், அவரது உபதேசங்களையும் மிகச் சிறப்பான ஆற்றொழுக்கான நடையில் தெளிவாக இதுகாறும் நாம் ரசித்து வந்த ரமணப் பிரவாகம் முடிவுற்றாலும், அதன் எழிலும், தாக்கமும் நம்மைவிட்டு என்றும் அகலாது. கயிற்றின்மேல் நடப்பதுபோன்ற கடினமான வெண்பா நடையில், சற்றும் இலக்கணப் பிழை இல்லாது, கம்பீரமாக எழுதிவந்தார் கிரேஸி மோஹன். பகவான் ஒரு வெண்பா வேந்தர். மிக அரிய தத்துவக் கருத்துக்களையும் சிக்கனமான வரிகளில் வெண்பாவில் அடக்கித் தெளிவாக அளிப்பார் பகவான். அவரது அடித் தொண்டரான மோஹனும் அதுபோன்றே 'ரமணாயனம்' யாத்துத் தந்தார். அவர் நடுவயதில் பகவானுடன் ஒன்றினும், அவர் தந்த ரமணக்கொடை என்றும் நிலைத்து இருக்கும். இன்றும் பகவானின் சந்நிதியில் பகவானுக்குத் தன் கவிமாலைகளைச் சூட்டியும், தன் இயல்பான நகைச்சுவையால் அவருக்கு நகைப்பூட்டியும் சேவை புரிகிறார் கிரேஸி மோஹன் என்பது திண்ணம்.

- ஆசிரியர்

# *நூல் அறிமுகம்*

## குருவே என் இறைவன்
## ஆசிரியர்: இசைக்கவி ரமணன்

*தத்துவ நூல்கள் எனும் நந்தவனத்தில் மணம் வீசும் பலவகை மலர்களும் மிக எழிலுடன் மலர்ந்திருப்பவை தமக்கு வழிகாட்டிய ஆசானுடன் சீடர் தமது ஐயந் தெளிதலைப் பெற்று ஞானஒளி அடைவதை விளக்கும் நூல்களே. பல்வேறு ஆசார்யர்களைச் சந்தித்தபின், பகவான் எனும் ஞான சூரியனைச் சந்தித்து, அவர் ஒளியைத் தேடியதை விவரிக்கும் பால் பிரண்டனின் 'ரகசிய இந்தியாவில் தேடல்' எனும் நூலை உதாரணமாகக் கொள்ளலாம். அதேபோன்று, குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரால் ஞானம்பெற்ற 'M' யாத்த Gospel of Ramakrishna எனும் உயரிய நூல்கள் வகுத்த பாதையில் இப்போது வந்துள்ள 'என் குருவே என் இறைவன்' என்று இசைக்கவி ரமணனால் இயற்றப்பட்ட எழில் பொருந்திய நூல். விசாகப்பட்டிணத்தில் வாழ்ந்திருந்த மாமுனிவர் ஸத்குரு சிவானந்த மூர்த்தியின் தாள்பற்றி, ஞானச் சுடர் ஏற்றிக் கொண்ட இசைக்கவி ரமணனின் மிகச் சிறப்பு வாய்ந்த சாதகர்க்கு மிகப் பயன்தரும் நூல் இது. இதே வழியில் வந்த பல்வேறு நூல்களைக் காட்டிலும் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும் இந்நூலின் தனி எழில், இதன் அருவிபோல் துள்ளிக் குதித்தோடும் எழில் நடை. சிலப்பதிகாரம்போல் உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுளாக எழுதப்பட்ட இந்நூல் இதன் கருத்தாழத்தாலும், ஆசிரியரின் குருபக்தியாலும் தெளிந்த நடையாலும் எதிரே நடக்கும் ஒரு நாடகத்தையே காண்பதுபோன்று உயரிய அளிப்பாலும் நம் கருத்தை ஈர்த்து, தன்னில் கரையச் செய்கிறது.*

*குருவிடம் சரணடைந்து அவருக்குச் சேவை செய்ததுடன் கூர்ந்த அறிவுசால் கேள்விகளைக் கேட்டு, தெளிவு பெறுதலே குருபக்தி என்று உபநிடதம் கூறுகிறது (பரிப்ரஸ்னேன யேவயா). அதற்கு வழிகாட்டுவதுபோல்,*

*இந்த நூல் முழுதும் ரமணனின் அறிவுசார்ந்த கேள்விகளும், அதற்கு சத்குரு அவர்களின் பரம ஞானத்திலிருந்து முகிழ்த்த பதில்களும் விளக்கங்களும் நம்மை ஓர் அற்புத உலகத்திற்கு இட்டுச் செல்கின்றது.*

*சரணாகதி என்பது ஒரு இலக்கற்ற நம்பிக்கை. Goal faith என்று குரு உபதேசம் செய்கிறார். சரணாகதி என்பது ஆன்மாவிடம் எதுவுமற்று முழுவதுமாக அடிபணிவதே. நாமறிந்தவர்களில் இவ்விதம் சரணடைந்தவர்கள் உண்டா என்ற ரமணனின் கேள்விக்கு, ஏன் இல்லை? ரமண மஹரிஷி என்று சத்குருவின் பதில் அம்புபோலப் பாய்ந்து வருகிறது.*

*கடைசி வார்த்தை சொல்லப்பட்டது என்று இந்த அத்யாயத்தை முடிக்கிறார் ஆசிரியர். பகவானே விளக்கியபடி, ஒவ்வொரு கேள்வியும் விடையுடன் கைகோர்த்துதான் வருகிறது என்று விளக்கியவர், அதே சமயம் குரு என்பவர் கேள்விக்கு விடை சொல்பவர் இல்லை. அவற்றை வேருடன் கெல்லி எறிபவர் என்ற அழகிய விளக்கத்தையும் தருகிறார். நீ உன் குருவைத் தேடு. அவர் உன்னைக் கண்டுபிடிப்பார் என்னும் வழிகாட்டலும் கைகோர்த்து வருகிறது. கடவுள் என்பவர் உன் தோலைக் காட்டிலும் உனக்கு மிக நெருக்கமாக இருப்பவர் என்னும் அழகிய விளக்கமும் தொடர்கிறது.*

*இங்ஙனம் இறைவனை உணர்வதற்கு எவ்வளவு பிறவி எடுக்க வேண்டுமோ என்ற அங்கலாய்ப்புக்கு உடனே ஸத்குருவின் விடையாகிய உன்னை உணர்வதற்கு ஒரு முழுப்பிறவி தேவையில்லை. ஏன், ஒருநாள் கூடத் தேவையில்லை. பாதிநாள் போதும் என்று தெறிக்கும் பொறியாக விளக்கம் வருகிறது. தவம் செய்யவேண்டும் என்பதற்கு சத்குரு கூறிய விடையை தப்பை எரித்தல் தவம், தன்னை அறிதல் தவம் என்ற அழகிய விளக்கம் அளிக்கிறார் ஆசிரியர்.*

*ஸத்குரு கூறும் மிகச் சிறந்த அறிவுரையான தியானத்தில் பெரிய தடை அனுபவங்களை எதிர்பார்ப்பதே என்பது சாதகர் அனைவருக்கும் வழிகாட்டக் கூடிய சிறந்த உபதேசம். இது நம் பகவான் அருளுரையின் பிரதிபலிப்பு.*

இதுவரை சத்குருவின் உபதேசங்களைத் தான் கேட்டு அறிந்ததைக் கூறிவந்த ரமணன், 25ஆவது அதிகாரம் தொடங்கி, அகங்காரம் அடக்கும் வழிமுறைகள் பற்றியும், பக்தி, ஞானம், யோகம் பற்றியும் ஆற்றொழுக்குபோல் தெளிவாக விளக்குகிறார். யோக வாழ்க்கைக்கு உதாரணமாகத் தன் குருவின் வாழ்க்கை நெறியையே எடுத்துக் காட்டாகத் தருகிறார் ரமணன். பகவானின், 'நான் யார்?' விசாரம் பற்றி ஸத்குரு தரும் ஆழ்ந்த விளக்கமும் இதில் அடங்குகிறது. இது 'ஞானமும், தியானமும்' என்ற 29ஆவது அதிகாரத்தில் மீண்டும் விளக்கப்படுகிறது. சத்குரு 2015ஆம் ஆண்டு 'தன் இருப்பிடத்திற்கு மீண்டும் செல்வதை' மிகவும் பக்தி பூர்வமாகவும் விளக்குவதுடன் இந்நூல் நிறைவு பெறுகிறது.

இந்நூலின் ஒப்புவமை அற்ற சிறப்பு இதன் தெள்ளிய விளக்கங்களும், ஒவ்வொரு உரைநடைப் பகுதியையும் ஒட்டிவரும் எழிலார்ந்த கருத்தாழம் மிக்க கவிதையும்தான். இந்த நடை, 'சிறையுரு நீர்போல் சிந்தை வாய்ப் பாயும்'. படிப்போர் உள்ளத்தினை பற்றிக் கொள்கிறது. கம்ப ராமாயணத்தில் கோதாவரி பற்றிய கம்பன் வருணனையை இது நினைவூட்டுகிறது.

புவியினுக்கு அணிஆய், ஆன்ற பொருள் தந்து,
புலத்திற்று ஆகி
அவி அகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து, தண்ணென் ஒழுக்கமும் தழுவி,
சான்றோர்
கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

கோதாவரியெனத் தெளிந்துவந்த ரமணனின் ஞானபக்தி வெள்ளம் இந்த நூலில் பெருக்கு எடுத்துப் பாய்கிறது. அனைவரும் நிச்சயம் படிக்கவேண்டிய நூல் இது.

- ராம் மோஹன்

நூல்: என் குருவே என் இறைவன்
ஆசிரியர்: இசைக்கவி ரமணன்
பதிப்பாளர்: வானதி பதிப்பகம்
விலை: ரூ. 200/-

# ரமணரின் பார்வையில் நான் யார் - வேதகாலம் முதல் ரமணர் காலம் வரை

## ஆசிரியர்: அபிநவ ராஜகோபாலன்

*ரமண கேந்திர பக்தர்கட்கும் 'ரமணோதயம்' வாசகர்களுக்கும் மிகவும் பரிச்சயமான அறிஞரும், ரமணத் துறை வல்லுநரும் ஆன முனைவர் ராஜகோபாலனின் கைவணத்தில் மலர்ந்த அழகிய, ஆழ்ந்த பொருள் கொண்ட நூல் இது. பாரத நாட்டின் ஆன்மிக அறிவுச் செல்வங்களை அடக்கிய இரு மொழிகள் தமிழும், சம்ஸ்கிருதமும் ஆகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்விரு செம்மொழிகளும் வளர்ந்து வந்திருப்பவை. பாரதப் பண்பாட்டின் ஆன்மிகப் பொக்கிஷங்கள்.*

*"வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண்*
*வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்*
*ஆனவன்காண்...."*

*என்று திருநாவுக்கரசர் இருமொழிச் செல்வங்கட்கும் பாலம் அமைத்திருப்பதை மீண்டும் புதுப்பித்து அமைத்து இருக்கிறார் அபிநவ ராஜகோபாலன். மனிதனின் அடிப்படைத் தேவைகள் முழுமை அடைந்த பின்னர் இவை எல்லாம் தேடி அலைந்து துய்த்தபின் நான் யார் என்ற அடிப்படை ஆராய்ச்சியில் மனிதன் ஈடுபடத் துவங்குகிறான். உடல், மனம், அறிவு என்ற பல பரிமாணங்களையும் கடந்த 'நான் யார்' என்ற ஆய்வில் மனித மனம் ஈடுபடத் துவங்கியது. வேதகாலம் தொடங்கி, உபநிஷத், பிரம்ம சூத்ரம், கீதை போன்ற பல நூல்கள் வழியாகவந்த இந்த ஆராய்ச்சி, சங்கரர் போன்ற மஹா ஞானிகள் வழியாகப் பரிணாமம் அடைந்ததையும் தமிழ் நாட்டில் தேவார, திவ்யப்ரபந்தம் போன்ற பக்தி இயக்கப் பெரு நூல்கள் கூறும் பக்தி மற்றும் ஆய்வுக் கருத்துகள் மூலமும் இந்த நான் யார் என்னும் ஆய்வு இந்தியத் தத்துவ இயலில் முக்கிய இடத்தை வகிப்பது. இதை திரு. ராஜகோபாலன் மிக ஆழ்ந்த கருத்துக்களுடன் இந்நூலில் அளித்துள்ளார்.*

*ஆகாசாத்பதிதம் தோயம்*
*யதாகச்சதி சாகரம்*

*என்று கூறுவதுபோல், இந்த நான் யார் என்னும் அடிப்படை வினாவின் விடைக்கு ஸ்திரமான அடித்தளம் அமைத்துக் கொடுத்த பகவான் ரமணரின் எளிய, நேரான ஞானப் பாதைக்கு இந்நூல் இட்டுச் செல்கிறது.*

*முதலில் படிக்கும்போது எளிதில் புரியாத சம்ஸ்க்ருத ஞானம் பக்தி பற்றி விளக்கும் நூல்களின் உள்ளடக்கத்துடன் தமிழ் பக்தி இலக்கிய நூல்களையும், நான் யார் கேள்வியுடன் தொடர்பு படுத்தி, ஆசிரியர் விளக்கும்போது நம்மை இதுகாறும் மறைத்த திரை விலகி, ஒளி தெரிவது போன்ற மலர்ச்சி நம் மனத்தே ஏற்படுகிறது.*

*நாமரூபத்தில் எவ்வளவுதான் இறைவனைக் கண்டு மகிழ்ந்தாலும் அளவளாவினாலும் ஒருநாள் அந்த நாமரூபம் மறையக் கூடியது. பேத உணர்வின்றி, 'நான்' என்னும் 'தான்' பரத்துடன் ஒன்றுவதே ஆன்ம நிலையில் சிகரம் என்பதை ஆசிரியர் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார்.*

*'அறிவு ஒன்று அடிநின்று அறிவார் அறிவில்*
*பிரிவு அன்ற பிரானை,*
*சுகக்கடல் பொங்க சொல்லுணர்வு அடங்க சும்மா பொருந்திடு'*

*என அருணாசலனை அழைத்து ஒன்றுபடுவதே நான் யார் ஆராய்ச்சியின் இறுதி நிலை என்பதை ராஜகோபாலன் தன் ஆற்றொழுக்கான எளிய, ஆழமிகுந்த நடையில் எழிலுற விளக்குகிறார்.*

*'ரமணரின் பார்வையில் நான் யார்' என்னும் இச் சிறப்பு மிக்க நூல் ரமண பக்தர்கள் அனைவரும், ஏன் தமிழ்நூல் கூறும் நல்லுலகம் முற்றிலுமே படித்துப் பயன் பெற வேண்டிய நூலாகும்.*

*- ராம்மோஹன்*

*நூல்: ரமணரின் பார்வையில் நான் யார்*

*ஆசிரியர்: அபிநவ ராஜகோபாலன்*

*பதிப்பாளர்: நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை600017; 9940045044*

*விலை: ரூ. 175/-*




**பகவான் ரமண மகரிஷிகளின் 141 ஆவது ஜயந்தி விழா**

## வினோதம் சேர்த்த உலகளாவிய நிகழ் நிலை கொண்டாட்டங்கள்

*பகவான் ரமண மகரிஷிகளின் 141 ஆவது ஜயந்தி விழா, தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை அனுசரித்து, 31/12/2020 அன்று அதிகாலை இந்திய நேரம் 06.00 மணிக்கு ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் துவங்கி 2021 புத்தாண்டு ஜனவரி முதல் நாள் காலை 10.45 வரை நேரலையில் உலகெங்கிலும் உள்ள ரமண அன்பர்களோடு இணைந்து 29 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது.*

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அதிகாலை முதலே சிறப்புப் பாராயணம், மஹன்யாச ருத்ரஜபம், அபிஷேகம் அலங்காரம், ஆரத்தி என ரமண ஜயந்தி விழா நடந்தேறியது.*

*இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நைஜீரியா, அமெரிக்கா கனடா மற்றும் பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த ரமண சத்சங்கக் குழுக்கள் பங்கேற்றன.*

*விழாவின் துவக்கத்தில் உரையாற்றிய திரு. கணேசன் அண்ணா நினைவு கூர்ந்த வண்ணம், முருகனார் கண்ட கனவு*



இன்று ஓரளவு நிஜமாகிவருகிறது. முருகனார், கணேசன் அண்ணாவிடம் "உலகளாவிய ரமண ஜயந்தி நடைபெறும், ஆனால் அன்று நான் உயிருடன் இருக்க மாட்டேன், கணேசா நீ இருந்து அதைப் பார்ப்பாய்", என்று கண்கள் பனிக்கக் கூறினாராம். அன்று முருகனாரின் கண்கள் பனித்தது போன்று இன்று நம் கண்களும் பனிக்கின்றன.

பாரதி, இந்திய நாட்டின் எதிர்காலத்தை எப்படி கனவுகண்டானோ அது போன்று முருகனார் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் ரமணர், அவரது பிறப்பு, பிறந்த நாள் கொண்டாடப்படும் என்று கனவு கண்டார், "புனர்வசு வண்ணம்" என்ற பாக்களின் (ஸ்ரீ ரமண சந்நிதி முறை) வாயிலாக.

"விதானம் கட்டித் தொங்கல் விட்டு விநோதம் சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
ஏதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறாமோ என்று
அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அது வண்ணம்."

என்னே ஒரு நிதர்சனம்! இன்றைய நிஜத்தை கருவுற்றக் கற்பனை! இன்று உலகம் முழுதும் ஓர் உற்சாகத்துடன், பகவான் ஜயந்தி அன்று, ஏதாகிலும் ஒன்றில் நம் பங்காற்றல் இருந்தே ஆகவேண்டும் என்ற உணர்வாற்றல் ஒன்றையே காரியமாகக் கொண்டு அன்பர்கள் அலைந்து திரிவதை

*என்னென்பது! இவ்வனைத்து அன்பர்களின் ஒருமித்த முனைப்பைக் காணும்போது பகவான் அனைவரின் உள்ளத்தும் "மணிகளில் சரடென உயிர் தொறும், ஒருவனாய் மருவி நிற்கிறார்" என்ற சத்தியம் உணர்வாகிறது. திரு. நொச்சூர் வெங்கட்ராமன் அவர்கள் ஜயந்தி விழாவன்று கொடுத்த செய்தி "நம்மில் பிரிவு என்பது ஏது, பகவானின்று எவரும் பிரிந்தவர் இல்லை." இவ்விழா வைபவம் அன்பர்களின் பேதமற்ற நேசத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது.*

*இங்கு முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். திரு. மணி அண்ணா ஜயந்தி விழா செய்தியில், பூசலார் நாயனாரின் பக்தியின் வெளிப்பாட்டை கூறினார். வசதிகள் நிறைந்த அரசனைக் காட்டிலும், எளிமையான பூசலார் நாயனார் எடுத்த விழாவினை இறைவன் எவ்வாறு உலகத்துக்கு வெளிக்கொணர்ந்தார் என்பதை சிலாகித்து நினைவு கூர்ந்தார். பூசலார் நாயனார்கள் இன்றும் உள்ளனர். ரமண பகவானின் ஜயந்தி விழாவை தங்களின் சக்திக்கு ஏற்ப ஆத்மார்த்தமாகக் கொண்டாடிய அன்பர்கள் ஏராளம்.*

*குடியாத்தத்தில் திரு பாபுஜி அவர்கள், தெருவில் பந்தலிட்டு பகவான் ஜயந்தியை எளிமையான பாமரர்களுடன் கொண்டாடியது மட்டுமல்லாமல் அங்கு சமபந்தி போஜனம் அதே தெருவோரத்திலேயே நடத்தி மகிழ்ந்தார். மணிவாசகரின் ஆவுடையார் கோயிலில் ஸ்ரீ ரமணர் குடிலில் பகவான் ஸ்ரீ ரமணர் ஜயந்தி விழா அன்பர்கள் கூடி எளிமையாக பக்தியுடன் பாடிக் கொண்டாடியதை என்னென்பது!*

*தஞ்சாவூர் பூண்டியில், வடவாற்றங்கரையில் கட்டப்பட்ட ரமணர் திருக்கோவிலில், ஊர் கூட்டி, கொட்டிய மழையிலும் தளராது உற்சாகத்துடன், அனைவர்க்கும் அன்னமிட்டு கொண்டாடிய எளிமையான அந்த பூண்டி திரு. மாரியப்பன், திருச்செங்கோட்டில், அர்த்தநாதீஸ்வர் மலையை அக்ஷரமணமாலை பாடிக்கொண்டு அன்பர்களுடன் நான்குமணி நேரம், மலைவலம் வந்து தனது குடிலில் அனைவர்க்கும் அன்னமிட்டு மகிழ்ந்த செந்தில்—சித்ரா தம்பதியினர், பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளி அடுத்த குஞ்சிபாளையம் ஸ்ரீராமஜெயம் ஆசிரமத்தில் (இங்கு*

*நாள்தோறும் 500 பேருக்கு அன்னதானம் நடைபெறுகிறது) பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் ஜயந்தி தின விழாவினை அங்குள்ள கோசலை பசுக்களுக்கு கீரைவகைகள், பழங்கள் அளித்து அன்பர்களுடன் கொண்டாடி மகிழ்ந்த நிர்வாகி சுகுமார் அவர்கள், இந்தியாவின் தென் கோடியில் வள்ளியூர் என்னும் சிற்றூரில் திருவண்ணாமலை ரமணாச்ரம கொண்டாட்டங்களை நோட்டீஸ் அடித்து அனைவர்க்கும் விநியோகித்த பெயர் தெரியா அன்பர், என்பதாக எத்தனையோ நல் இதயங்கள் (விடுபட்டவர் அநேகம்), யாரை விட்டோம் என்றே அறியமுடியாத பெரும் அன்பர்கள் கூட்டம்.*

*பொள்ளாச்சி, கோட்டூர் மலையாண்டிப்பட்டினம், ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம் (கேட்பவர்கள் அனைவருக்கும்அக்ஷரமணமாலை அனுப்பும் ஆசிரியர் பாலு) பகவான் ஸ்ரீ ரமண ஜயந்தி விழாவை திருக்கயிலாயம் சிவனடியார்கள் திருவாசகம் முற்றோதல் செய்ய, அக்ஷரமணமாலை பாராயணம் செய்து கொண்டாடி மகிழ்ந்தது.*

*முருகனார் அருளிய ஸ்ரீ ரமண சந்நிதிமுறை எனும் பொக்கிஷத்தை, கூப்பிட்ட இடங்களுக்கெல்லாம் சென்று பண்ணிசைத்து பாடி மற்றவர்களை மகிழ்வித்து தானும் மகிழும் திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் தொண்டை மறக்கமுடியுமா?*

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு பாத்தியப்பட்ட, இராமநாதபுரம் முருகனார் மந்திரம், சிறப்பாக சிரஞ்சீவி எனும் தொண்டரின் பங்காற்றலுடன் நடந்தேறிய ஜயந்தி விழா, மதுரை ரமண மந்திரத்தில், ரமண அன்பர்களின் பெருங்கூட்டம் அண்ணன் சோமு அவர்களுக்குத் துணை நின்று பலநாட்களாக ஜயந்தி விழாவை பரவசத்துடன் கொண்டடியது, இவர்களின் ஆத்மார்த்தத்திற்கு அளவுதான் என்ன?*

*மேலும் ரமணாலயம் சென்னை குரோம்பேட்டையில், திரு. சத்குருநாத ஓதுவார், திருமதி. காயத்ரி அவர்கள் இசை நிகழ்வகளுடன், நேரலை தொகுப்புடன் கலந்து கொண்டாடினர். சென்னை ரமண கேந்திரம் மயிலை வாழ் அன்பர்கள் வாழையடி வாழையாக, சிறப்புறக் கொண்டாடி*



மாடவீதிகள் தோறும் ரமண உருவம் தாங்கி, பதாகை, தோரணம், வாண வேடிக்கைகளுடன் எப்பொழுதும்போல் கொண்டாடி மகிழ்ந்தது நாடறியும். சென்னை சூளைமேடு, ரமண அன்பர்கள் காலம் காலமாக வேதம் ஒலிக்க, முருகனாரின் பாக்கள் அனைத்தையும் முற்றுமாக ஓதி, வீதி தோறும் ரமண உருவம் பவனி வர கொண்டாடி மகிழ்வதை நாம் கூறவேண்டுமா! மேற்கு மாம்பலம் அன்பர்களும் ரமண ஜயந்தி விழாக் கொண்டாடி இவ்வாண்டும் ரமணவீதி உலா எடுத்து மகிழ்ந்தனர்.

இவ்வனைத்து நிகழ்வுகள் - மார்கழி மாத புனர்வசு நன்னாள் கொண்டாட்டங்கள், உலகளாவிய ஒருமித்த நடப்பாக்கியதில் பெரும்பங்கு ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தற்காலத் தலைவர் திரு. வெங்கட் S ரமணன் (திரு.ஆனந்த்) அவர்களையே சாரும். இது மிகை அல்ல. இறுதியில் அவர் ஆற்றிய உரை, நம்மை அவர் எதிர்காலத்தில் மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர் கூடும் ஓர் கூட்டுக் குடும்பமாக, ரமண குடும்பமாக வளர்க்கும் கருவாக அமைந்தது.

இறுதியாக அருணாசல ஆச்ரமம், நியூ யார்க் அன்பர்கள், மற்றும் அதன் தலைவர் திரு. மோகன் ராமசாமி அவர்களின் ஓயா உழைப்புக்கு ரமணோதயம் தலை வணங்குகிறது.

நமோ ரமணாய நலம் பெற வாழ்க!
விமோசன மெய்யன் விரை மலர்த்தாள் வாழ்க!

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை**, *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



பகவான் மண மகரிஷிகளின் 141 ஆவது ஜயந்தி தின கொண்டாட்ட காட்சிகள்
ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை,
ரமணாலயம், குரோம்பேட்டை, பொள்ளாச்சி, குடியாத்தம், பூண்டி மற்றும் கோவை

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

